லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-7 இதழ்-7 டிசம்பர்-2018 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



கொந்தளிக்கும் மக்கள்!
பயனடையுமா தமிழகம்?

# தமிழ்நாடா?
# புயல்நாடா?



வள்ளலார் அருளிய
கல்ப மருந்து
பத்தியமில்லா மருந்து
குணமாகும் நோய்கள்
■ புற்று நோய்கள்
■ இருதய அடைப்புகள்
■ உள் உறுப்புகளில்
ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்
■ சிறுநீரக கற்கள்
■ சிறுநீரகக் கோளாறுகள்
■ கல்லடைப்பு
■ சதையடைப்பு
■ சிறுநீர் பிரச்சனை
■ இரத்த ஓட்டம் சீராகும்
■ சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
■ கபம் ■ காசம் ■ சைனஸ்
■ கண்பார்வை கோளாறுகள்
■ வாதம் ■ பித்தம்
போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்
நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்
சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்
அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்
எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89
செல் : 99417 64922, 94441 80984

## தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

# அடங்காத சாதீய கொலைகள்!

ஒசூர் அருகே, சாதி மறுப்புத் திருமணம் செய்துகொண்ட புதுமணத் தம்பதியினரை, அப்பெண்ணின் குடும்பத்தினரே ஆணவக்கொலை செய்திருப்பது நமது முகத்தில் சாதிவெறி உமிழ்ந்த எச்சிலாக வழிகிறது. இது ஜனநாயக சமூகம்தானா? குடியுரிமையின் எல்லைகள் இங்கே யார் கையில் இருக்கின்றன? வெறும் சம்பிரதாயப் பச்சாதாபம், அடையாளக் கண்டனம் இவற்றையெல்லாம் தாண்டி சாதி ஆணவப் படுகொலைகளில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான தண்டனை வழங்க சிறப்புச் சட்டங்கள் இயற்றப்பட வேண்டிய அவசியத்தை இந்தச் சம்பவம் மிகத் தீவிரமாக உணர்த்துகிறது.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,000 ஆணவக் கொலைகள் நடப்பதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைப்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதும் அரிதாகவே நடக்கிறது. ஒரு ஜனநாயக சமூகத்தில் திருமண வயதை எட்டிய இருவர், தங்களுடைய வாழ்க்கைத் துணையைத் தீர்மானிக்கும் உரிமைகூட மறுக்கப்படுவதும் அவர்கள் கொல்லப்படுவதும் கொடூரம்.

எல்லோருக்குமான ஒரு ஜனநாயக அரசு இதற்காக வெட்கப்பட வேண்டும். ஆனால், ஆட்சியாளர்களோ முகம் திருப்பி நிற்கிறார்கள். “தமிழகத்தில் கௌரவக் கொலைகள் நடப்பதில்லை. அப்படி நடந்தால், அதைத் தடுக்க தற்போது உள்ள சட்டங்களே போதுமானவை” என்று முதல்வராக இருந்த ஒரு சமயத்தில் ஓ.பன்னீர்செல்வம் சட்டமன்றத்தில் கூறியதை இங்கு நினைவுகூரலாம். கண்ணைத் திறந்தபடியே மூடிக்கொள்ளும் நம்முடைய கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகவே இதைக் குறிப்பிட வேண்டும்.

தமிழகத்தில் ஆணவக் கொலைகள் நடப்பதில்லை என்று தமிழக அரசு கூசாமல் சொல்லிக்கொண்டிருக்கும் நிலையில், சாதி மறுப்புத் திருமணம் செய்துகொள்ளும் இளைஞர்களும் இளம் பெண்களும் தொடர்ந்து கொடூரமாகக் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

பிற மாநிலங்களை ஒப்பிட, சாதி மறுப்புத் திருமணங்களின் எண்ணிக்கை தமிழகத்தில் மிகவும் குறைவு என்பதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. சமூக நீதியில், சம உரிமையைப் பெறுவதில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் நிலையில் உள்ள தமிழகம், சமத்துவத்தில் நேரெதிராக சாதிய அநீதி ஒடுக்குமுறையைத் தொடர்வது வெட்கக்கேடு.

சாதிய ஒடுக்குமுறைகள், ஆணவக் கொலைகளைத் தடுத்து நிறுத்த தீவிர செயல்திட்டம் நமக்குத் தேவை. ஆணவக் கொலைகளைத் தடுக்கும் வகையில் சிறப்புச் சட்டம் ஒன்றை உடனடியாக நிறைவேற்றுவதே இப்போதைய தேவை. கொலையாளிகள் மட்டுமல்ல, கொலையாளிகளுக்குத் துணை போகும் அதிகார வர்க்கத்தையும்கூட தண்டிக்கும் வல்லமை இந்தச் சட்டத்துக்கு வேண்டும்!

– ஆசிரியர்



# குற்ற நகரமா? திருப்பூர் !

திருப்பூரில் இயங்கும் எந்த ஆலையாக இருந்தாலும் சரி, அதில் வடமாநில தொழிலாளர்கள் பணிக்கு சேரும்போது, அவர்களது போட்டோ மற்றும் முகவரி உள்ளிட்ட முழு தகவல் காவல்நிலையத்துக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்பது மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவு. ஆனால், பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் இந்த உத்தரவை பின்பற்றுவது இல்லை. போலீசாரும் முறையான கண்காணிப்பு பணியை மேற்கொள்வது இல்லை. விளைவு, வடமாநில தொழிலாளர்களின் எண்ணிக்கை புற்றீசல்போல் பெருகிவிட்டது. இந்த எண்ணிக்கைக்கு ஏற்ப, திருப்பூர் நகர் மற்றும் புறநகரில் சமீப காலமாக குற்றச்செயல்களும் அதிகரிக்க துவங்கிவிட்டது.

திருப்பூரில் இயங்கும் சில நிறுவனங்களில் தொழிலாளரின் முழு விவரம் தெரியாமல் வேலைக்கு சேர்க்கப்படுகின்றனர். ஒரு சில தொழிலாளர்கள் வெளியிடங்களில் குழுவாக தங்கி வேலைக்கு செல்கின்றனர். இவர்கள் வேலை நேரம் போக, மீதி நேரங்களில் திருட்டு, வழிப்பறி, கொள்ளை, கற்பழிப்பு, கொலை, போதை பொருள் விற்பனை உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட துவங்கிவிட்டனர்.

'டாலர் சிட்டி' என அழைக்கப்படும் திருப்பூர் நகரில் குற்றச்செயல் நாளுக்கு நாள் அதிகரிப்பதால் இங்குள்ள மக்கள் தவிப்பில் உள்ளனர். திருப்பூர் மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் ஆயிரக் கணக்கான பின்னலாடை நிறுவனங்கள், பஞ்சாலைகள், சாய ஆலைகள், விசைத்தறி கூடங்கள், கைத்தறி கூடங்கள் இயங்குகின்றன. தவிர, கட்டுமானப் பணி, ஓட்டல், துப்புரவு பணி, கோழிப்பண்ணை, செங்கல்சூளை, கரும்புவெட்டும் தொழில் உள்பட பல்வேறு வகையான தொழில் நிறுவனங்களில் 11 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர் பணிபுரிகின்றனர். இவர்களில், கிட்டத்தட்ட 40 சதவீதம் பேர் வடமாநில தொழிலாளர்கள். இவர்களது எண்ணிக்கை கடந்த 5 ஆண்டில் இருமடங்காக அதிகரித்து விட்டது. 15 வயது முதல் 40 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் தொழிலாளர்கள் திருப்பூர் புறநகர் பகுதிகளில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கியுள்ளனர்.

வழிப்பறி, திருட்டு மட்டுமின்றி, பாலியல் குற்றச்செயல்களிலும் ஈடுபடுகின்றனர். தமிழகம் முழுவதும் குட்கா உள்ளிட்ட புகையிலை பொருள் விற்க தடை இருந்தாலும், திருப்பூரில் உள்ள வடமாநில தொழிலாளர்களுக்கு இவை தங்கு தடையின்றி கிடைக்கிறது. கடந்த வாரம் திருப்பூர் போயம்பாளையம் பகுதியில் 4 வயது சிறுமியிடம் அத்துமீறிய வடமாநில தொழிலாளர்கள் இதுவரை போலீஸ் பிடியில் சிக்கவில்லை. ரயில் பயணிகளிடம் கொள்ளை, ஏ.டி.எம். மையங்களில் கொள்ளை என இக்குற்றச் செயல்களிலும் வடமாநில தொழிலாளர்கள் தான் அதிகளவில் ஈடுபடுகின்றனர். திருப்பூர் மாவட்டத்தில் முந்தைய ஆண்டை ஒப்பிடுகையில்

இந்த ஆண்டு மேற்கண்ட குற்றச்செயல்கள் 37 சதவீதம் அதிகரித்துள்ளது. முன்பு ஒரு காவல்நிலையத்தில் மாதம் 15-20 வழக்கு பதிவானது.

ஆனால், தற்போது அதே காவல்நிலையத்தில் 25-35 வழக்குகள் பதிவாகிறது. போலீசார் நடத்திய முதல்கட்ட விசாரணையில், குற்றவாளிகளில் 90 சதவீதம் பேர் வடமாநில தொழிலாளர்கள் என தெரியவந்துள்ளது. வடமாநில தொழிலாளர்களின் குற்றச்செயல் அதிகரித்து வருவதால் 'டாலர் சிட்டி' என பெயரெடுத்த திருப்பூர் மாநகர மக்கள் கடும் பீதிக்கு உள்ளாகியுள்ளனர்.

இதுபற்றி மக்கள் விழிப்புணர்வு இயக்க செயலாளர் தமிழ்மணி கூறியதாவது: திருப்பூர் மாநகர் மற்றும் தாராபுரம், அவினாசி, உடுமலை, பல்லடம், காங்கேயம் ஆகிய பகுதிகளிலுள்ள தொழில் நிறுவனங்களில் வேலை பார்க்கும் வடமாநில தொழிலாளர்கள் குறித்த அடையாள அட்டை முறையாக பராமரிக்கப்பட வேண்டும். அடையாள அட்டை இன்றி தங்கியிருக்கும் நபர்களை வெளியேற்ற வேண்டும். வடமாநில தொழிலாளர்கள் வேலை பார்க்கும் நிறுவனங்களை தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் ஆய்வுசெய்ய வேண்டும்.

இத்தொழிலாளிகளின் சொந்த மாநிலம், கிராமம், காவல்நிலையத்தின்மூலம்வழங்கப்பட்ட நன்னடத்தை சான்று, கிராம நிர்வாக அலுவலரின் இருப்பிட சான்று ஆகிய தகவல்களை சேகரிக்க வேண்டும். எந்தவித ஆவணங்களும் இல்லாத தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திய நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இத்தொழிலாளர்களின் முழுவிவரங்களை சேகரிக்காவிட்டால் இனிவரும் காலங்களில் திருப்பூர் பகுதியில் சட்டம் ஒழுங்கு சீர்குலையும். இவ்வாறு தமிழ்மணி கூறினார். திருப்பூர் மாவட்ட காவல்துறை அதிகாரிகள் கூறுகையில், ''கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. முறையான அடையாள அட்டை இருந்தால் மட்டுமே பணிக்கு சேர்க்க வேண்டும் என ஆலை உரிமையாளர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் பற்றி அருகில் உள்ள காவல் நிலையத்துக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கலாம்'' என்றனர்.

- கனகதுர்கா


**வாழ்க தமிழ்!** **வளர்க தமிழகம்!!**

# மக்கள் விசாரணை®

மக்களின் மனக்குமுறல்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-7 இதழ்-7 டிசம்பர்-2018

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ் சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

**ஆசிரியர் குழு**
V.அருணாச்சலம், A.C. குமார், S. அனந்த கிருஷ்ணன், M.A.,

**நிர்வாக ஆசிரியர்**
வீ.சிவசங்கரன், B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன், P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி, V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ராம்குமார் சேலம், M.சத்தியராஜ் நாமக்கல், A.பாலகிருஷ்ணன், K.செந்தில்குமார் கோவை, R.ஜெயா, சென்னை, நாகராஜ் மூணாறு, S.ரமேஷ், மாரிமுத்து உளுந்தூர்பேட்டை, சுசீ ஈஸ்வர் தென்காசி, N.சிலம்பரசு தர்மபுரி, வெங்கடேசன் தி.மலை, P.சுப்பிரமணியன் திருநெல்வேலி

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம், K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா, Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா, V.கிஷோர் குமார், சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், ஆரணி ஏழுமலை, M.முருகன், சத்தியநாராயணமூர்த்தி, N.குப்புசாமி, முரளி, நீலகண்டன், N.சீனிவாசன், G.ஆனந்த்குமார்

**சட்ட ஆலோசகர்கள்**
M.குணசீலன் B.Com., M.L.,
M.சுதாகர் B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

**புகைப்பட நிருபர் : M.சந்தோஷ்சிவன்**

**இதழ் வடிவமைப்பு: ஆப்பிள் பிரிண்டர்ஸ்**



ஆலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600078.
E-mail: writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
Website: www.makkalvisaranai.com
Contact: 93821 33334, 044 - 4861 5321

பட்டாசு வெடிப்பதால் காற்றில் மாசு கலந்து, சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாக கூறி, கடந்த 3 ஆண்டுக்கு முன் உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் கடந்த 23ம்தேதி உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. தீபாவளியன்று 2 மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்கவேண்டும் என நிபந்தனை விதித்தது. இந்த கட்டுப்பாடு காரணமாக இந்த ஆண்டு பட்டாசு விற்பனை நமத்துப்போய் விட்டது. சுமார் 40 சதவீதம் பட்டாசு தேக்கம் அடைந்துள்ளது. 1,500 கோடி வர்த்தகம் பாதிக்கப்பட்டது.

**உச்சநீதிமன்ற உத்தரவுப்படி,**

முடங்கியுள்ளது. இனி ஆலைகளை மூடுவதை தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு பட்டாசு உற்பத்தியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். உச்ச நீதிமன்ற நிபந்தனைகளை நீக்கினால் மட்டுமே பட்டாசு ஆலைகள் இயங்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, உச்சநீதிமன்ற நிபந்தனைகளை நீக்கக்கோரி பட்டாசு உற்பத்தியாளர்கள் நேற்று முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடங்கி உள்ளனர். ஏற்கனவே, பட்டாசுக்கு 28% ஜிஎஸ்டி வரி விதிக்கப்பட்டுள்ளதால் இத்தொழில் பெருமளவு நசிந்துவிட்டது. இந்த வரியை 15 சதவீதமாக

# பட்டாசு உற்பத்தி செய்யவில்லையெனில், ஆலை உரிமம் ரத்து:

## மத்திய வெடிபொருள் கட்டுப்பாட்டு அதிகாரிகள் எச்சரிக்கை!

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, பட்டாசு உற்பத்தி செய்யவில்லையெனில், ஆலை உரிமம் ரத்து செய்யப்படும், ஆலைகளுக்கு"சீல்" வைக்கப்படும் என மத்திய வெடிபொருள் கட்டுப்பாட்டு அதிகாரிகள், பட்டாசு ஆலைகளுக்கு எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பியுள்ளனர். மேலும், பேரியம் நைட்ரேட் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த கெமிக்கல் இல்லாமல் சங்கு சக்கரம், புஸ்வாணம், சாட்டை, மத்தாப்பு, கம்பி மத்தாப்பு போன்ற 60 சதவீத பட்டாசுகளை உற்பத்தி செய்ய முடியாது. சரவெடி தயாரிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதால், பட்டாசு உற்பத்தி தொழில் அடியோடு




குறைக்க வேண்டும் என வலியுறுத்தி கடந்த ஆண்டு பட்டாசு ஆலை உரிமையாளர்கள் தொடர் போராட்டம் நடத்தினர்.

ஆனால் பலன் இல்லை. எந்த பிரச்னையாக இருந்தாலும் சரி, உரிய முறையில் அணுகினால் நிச்சயம் தீர்வு உண்டு. "முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும்" என்பது பழமொழி. அந்த வகையில், பட்டாசு தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை படிப்படியாக சீர்படுத்தவேண்டும். அதைவிடுத்து ஒட்டுமொத்தமாக தொழிலை அடியோடு அழிப்பது தொழிலாளர் விரோத செயல் ஆகிவிடும். 8 லட்சம் தொழிலாளர்களின் நலனை கருத்தில்கொண்டு, மத்திய-மாநில அரசுகள், உச்சநீதிமன்ற வழிகாட்டுதலுடன் சரியான முடிவை மேற்கொள்வது நல்லது.

- அகிலாண்டேஸ்வரி

# எய்ட்ஸ் நோயை 99% குணப்படுத்தும் புதிய மருந்து

## இஸ்ரேல் சாதனை



இஸ்ரேலை சேர்ந்த ஜியோன் (Zion Medical) மருந்து நிறுவனத்தின் எய்ட்ஸ் மருந்து முதல் முறையாக மனிதர்களிடம் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டு, அதன் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த மருந்து 99 சதவீதம் அளவுக்கு வெற்றியை ஏற்படுத்தி உள்ளது, உலகம் முழுவதும் மருத்துவ துறையால் ஆச்சரியத்துடன் பார்க்கப்படுகிறது.

எய்ட்ஸ் பாதிப்புக்கு 35 ஆண்டுகளாக உலகம் முழுவதும் மருந்து கண்டுபிடிக்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. ஏனெனில் ஆண்டுதோறும் எய்ட்ஸ் பாதிப்பால் இறப்பவர்கள் எண்ணிக்கை, உலகில் ஆண்டுக்கு சுமார் 10 லட்சமாக உள்ளது. இந்த கொடிய பாதிப்பினால் உலகம் முழுவதும் 3 கோடியே 79 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு கோடியே 80 லட்சம் பேர் குழந்தைகள். பாதிக்கப்பட்டவர்களில் 59 சதவீதம் பேருக்கு மட்டுமே உரிய சிகிச்சை கிடைத்துள்ளது. மற்றவர்கள் எய்ட்ஸ் பாதிப்பால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி இறக்கின்றனர்.

இந்த கொடிய பாதிப்புக்கு இதுவரையில் உரிய மருந்து கண்டுபிடிக்கப்படவே இல்லை என்பதுதான் மருத்துவ துறையில் இருக்கும் ஆச்சரியமான உண்மை. உலகில் அங்கொன்றும், இங்கொன்றுமாக வெளியிடப்பட்ட அறிவிப்புகள் கூட பின்னாளில் பொய்த்துபோனது. இப்போதைக்கு எய்ட்சால் பாதிக்கப்பட்டவர்களின், உயிர் வாழும் காலத்தை மட்டும் சற்று நீட்டிக்கக்கூடிய மருந்துகள் மட்டுமே உள்ளன.

ஆனால், முழுமையாக பாதிப்பை சரி செய்யும் மருந்து இன்னமும் கண்டுபிடிக்கப்படவே இல்லை. உலகம் முழுவதும் பல்வேறு நாட்டு அரசுகள் இதற்காக ஆராய்ச்சிக்கு கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்து வருகின்றன. இந்த நேரத்தில்தான் ஜியோன் மருந்து நிறுவனம், எய்ட்சால் பாதிக்கப்பட்ட கோடிக்கணக்கானவர்களின் மனதை குளிர வைக்கும் செய்தியை வெளியிட்டுள்ளது. இதுவரையில் எய்ட்ஸ் செல்லை ஒழிப்பது தொடர்பான பாதையில்தான் ஆராய்ச்சிகள் நடந்து வந்தன. ஜியோன் நிறுவனம், இதற்கு மாற்றாக எய்ட்சால் பாதிக்கப்பட்ட செல்களை ஒழிக்கும் ஆராய்ச்சி என்ற புதிய பாதையில் பயணித்து வெற்றி கண்டுள்ளது.

அமெரிக்க காமிக்ஸ் புத்தகங்களில் வரும், அழகான பச்சை நிற தோல்கொண்ட இளம் பெண்ணான கம்மோரா என்ற பெண்ணின் பெயரில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மருந்து மிக நுட்பத்துடன் செயலாற்றும் தன்மை கொண்டது. அதாவது, எய்ட்ஸ் வைரசால் பாதிக்கப்பட்ட மனித செல்களில் புகுந்து அதன் டிஎன்ஏ.வை உடைக்கிறது. இதனால், அந்த செல் வளர முடியாமல் வாழ்நாளை இழக்கும். வெறும் 4 வாரத்தில் பாதிக்கப்பட்ட அத்தனை செல்களையும் பரலோகம் அனுப்பும் கம்மோரா, எய்ட்சால் பாதிக்கப்பட்டவர்களிடம் முதல் முறையாக அளிக்கப்பட்டு வெற்றிகரமாக பரிசோதித்து பார்க்கப்பட்டுள்ளது. விரைவில் இது விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம்.

– இர்வின்

# தமிழ்நாடா? புயல்நாடா?



தமிழகத்தில் 32 மாவட்டத்தில் 86 வருவாய் கோட்டத்தில், 16,682 வருவாய் கிராமங்கள் உள்ளது. இதில், மலை, கடல் சார்ந்த மாவட்டங்களில் புயல், மழை, வெள்ளம், வறட்சி, சூறாவளி அபாயம் உள்ளது. இயற்கை சீற்றங்களை சமாளிக்க மாவட்டம் வாரியாக வருவாய் துறையில் பேரிடர் மீட்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பேரிடர் மீட்பு மையம் தொலைபேசி இணைப்பு உள்ள தகவல் மையமாக பெயரளவிற்கு செயல்படுகிறது. நீச்சல் தெரிந்த, மீட்பு திறன் பயிற்சிபெற்ற வீரர்கள் கொண்ட மீட்பு படையை உருவாக்காமல் தீயணைப்பு துறையை மட்டும் நம்பி வருவாய் துறையினர் காலம் கடத்தி வருகின்றனர்.

இயற்கை சீற்ற பாதிப்பில் கடந்த ஆண்டு, 7 மாவட்டங்களில் 4,981 கிராமங்களில் பாதிப்பு ஏற்பட்டது. 25 பேர் மழைக்காலத்தில் ஏற்பட்ட பாதிப்பில் இறந்தனர். 854 கால்நடைகள், 53,009 கோழிகள் இறந்துவிட்டதாக பேரிடர் மீட்பு துறை கணக்கெடுப்பில் தெரியவந்தது. 2,940 வீடுகளும், 68,482 குடிசைகளும், 8,274 மண் வீடுகளும் பகுதி மற்றும் முழுமையாக பாதிக்கப்பட்டது. 59,020 ஹெக்டர் நிலத்தில் பயிர் சேதம் ஏற்பட்டது. 46,000 மின் கம்பங்கள், 800 டிரான்ஸ்பார்மர்கள், 1.5 லட்சம் மரங்கள் சாய்ந்து விழுந்தது. 1,746 கி.மீ தூர ரோடு முழுமையாக சேதமடைந்தது. 30 ஆயிரம் கி.மீ தூர ரோடு ஆங்காங்கே மேடு பள்ளமாக மாறியது. 234 சிறு, நடுத்தர பாலங்கள் போக்குவரத்திற்கு பயன்படாமல் பழுதானது.

நடப்பாண்டில், கஜா புயலுக்கு முன்பாக, மழை பாதிப்பில் மாநில அளவில் 17 நபர் இறந்தனர். 622 கால்நடைகள், 49 ஆயிரம் கோழிகள் இறந்தன. 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் பாதிக்கப்பட்டது. 1.7 லட்சம் மரங்கள் காற்று மழையால் விழுந்தது. நடப்பாண்டில், 4,399 கிராமங்களுக்கு பேரிடர் அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. குறிப்பாக, நாகப்பட்டணம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நீலகிரி, கோவை, திருவாரூர் மாவட்டங்களில் காற்று, மழையின் தாக்கம் அதிகமாக இருக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

மழை, புயல் பாதிப்பு தொடர்பாக பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு இழப்பு ஏற்பட்டு பொருளாதாரம் சீரழிவு ஏற்படுவது வாடிக்கை யாகி விட்டது. பேரிடர் அபாயத்திற்கு முக்கிய காரணம் இயற்கை மட்டுமல்ல, இயற்கை அழிப்பு, ஆக்கிரமிப்பும் முக்கிய காரணமாக

கூறப்படுகிறது. ஆறு, குளம், குட்டை, வாய்க்கால், ரயில்வே காலியிடம், பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, உள்ளாட்சித்துறைகளின் காலியிடங்களில் ஆக்கிரமிப்புகள் அதிகமாகி விட்டது.

நீர்தேக்கங்களில் சுமார் ஒரு லட்சம் வீடுகள் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது. பூகம்ப அபாயத்தில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் இருக்கிறது. இதுபற்றி பேரிடர் மீட்பு துறையினர் கூறுகையில், ‘‘மழை பெய்யும் முன்பே அபாய வீடுகளை காலி செய்யவேண்டும். மழை வெள்ளம் வந்த பின்னரும் அங்கேயே தங்கியிருக்கும் நபர்கள் அபாயத்தில் சிக்குகிறார்கள். குளம், குட்டை, வாய்க்கால் நீர் புகுந்தாலும் வீடுகளை விட்டு செல்ல மக்கள் தயங்கும் நிலையிருக்கிறது. மரங்கள், மின் கம்பங்கள் சாய்ந்து விழுவதால் பாதிப்பு அதிகமாகி விடுகிறது. தாழ்வான பகுதியில் உள்ள நீரை, நீர்தேக்கங்களுக்கு திருப்பி விடவேண்டும். வடிகால் இல்லாத பகுதியில் அதிக பாதிப்பு ஏற்படுகிறது. மக்களை எச்சரித்து வெளியேற்றினால் மட்டுமே இயற்கை சீற்ற பாதிப்பை தவிர்க்க முடியும். பயிர் பாதிப்புகளை தடுக்க, அபாய பகுதியில் வெள்ள தடுப்பு சுவர் அமைக்கவேண்டியுள்ளது’’ என்றனர்.



தமிழகம் கியாந்த், நாடா, வர்தா, ஓகி போன்ற புயல்களை சந்தித்துள்ளது. தற்போது கஜா புயலை சந்தித்துள்ளது. வழக்கமாக ஆண்டுதோறும் ஏதாவது புயல் வந்து வலுவிழந்து சென்றுவிடும். காற்றின் வேகம் குறையும்போது வலு இழக்கிறது. ஆனால், பலமான காற்றுடன் மழை பெய்தால் உச்சக்கட்ட பாதிப்பு ஏற்படும். ஓகி புயல் 85 கி.மீ வேகத்திலும், வர்தா 79 கி.மீ வேகத்திலும் வீசியது. கியாந்த் புயல் 155 கி.மீ வேகத்தில் வீசியது. தற்போது கஜா புயல் 90 கி.மீ வேகத்தில் தாக்கியுள்ளது. வரும் காலத்தில் புயல் காற்றின் வேகம் 200 கி.மீ வேகத்தை எட்டும் அபாயம் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

– ஆசிரியர்


# நிருபர்கள் தேவை

பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்
துடிப்பான, உண்மையை வெளிக்கொணர
சேவை மனப்பான்மையுடன்
பணியாற்ற மாவட்ட வாரியாக

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை ✳ அருணை முரசு

Cell : 93821 33334 / 044 - 4861 5321

Email : writermouriyan@gmail.com

முனைவர் ஆ.மவுரியன்






# அம்புஜம்மாள்

## கள்ளுக்கடை மறியல், அன்னிய துணி மறுப்பு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்

தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பி இந்திய சுதந்திரப் போரைத் துவக்கிய காந்திஜி, சென்னைக்கு வந்தபோது, அம்புஜம்மாளின் இல்லத்தில்தான் தங்கினார். அந்தக்கணமே மகாத்மாவின் மீதும், அவரது கொள்கைகள் மீதும் அம்புஜம்மாளுக்கு அபாரமான ஈர்ப்பு ஏற்பட்டது. கள்ளுக்கடை மறியல், அன்னியத் துணிகள் புறக்கணிப்புப் போராட்டங்களில் கலந்துகொண்டதற்காக வேலூர் சிறையில் ஆறு மாதம் அடைக்கப்பட்டார் அம்புஜம்மாள். காந்திஜி, அம்புஜம்மாளின் சேவை ஈடுபாட்டைக் கண்டு மகிழ்ந்து, வார்தா ஆசிரமத்துக்கு அழைத்தபோது, தந்தையின் எதிர்ப்பையும் மீறி வார்தா சென்றார். அம்புஜம்மாளை, 'என் சுவீகாரப் புத்ரி' என அன்போடு காந்திஜி குறிப்பிட்டிருக்கிறார்.

எஸ். அம்புஜம்மாள் காங்கிரஸ் தலைவராக திகழ்ந்து பின்னர் காந்தியுடன் முரண்பட்டு விலகிய ஸ்ரீனிவாச அய்யங்காரின் மகள். காந்தியை வீட்டுக்குள் அனுமதிக்க மறுத்தவர், பின்னர் இயல்பான உறவில் இருந்தார், அதன் பின் விலக்கம் கொண்டார். அம்புஜமம்மாள் 1944 எழுதிய சிறு நினைவு குறிப்பு இந்நூல். கஸ்தூர்பா இறந்து , காந்தி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சமயத்தில் எழுதி இருக்கிறார். திருமதி. அம்புஜம்மாள் அண்ணல் காந்திஜியின் மகள். ஆம் அப்படித்தன் அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பெற்ற தந்தையின் பெயர் திரு சீனிவாசன் ஆகும் ஆனாலும் தனக்கு தந்தைகள் இருவர் என்று கூறி காந்திஜி அவர்களையும் சேர்த்துக் கொண்டு பேசுவார்கள். அவர்களின் நிறுவனத்தின் பெயர் கூட சீனிவாசகாந்தி நிலையம் என்ற பெயரைத் தாங்கியுள்ளது. அந்தளவு காந்திஜியின் மேல் பற்று கொண்டிருந்தவர். இவரின் பிள்ளைப் பருவத்தை அவசியம் நாம் பார்க்க வேண்டும்

இவர்கள் குடும்பம் சாதாரணமானதல்ல. கல்வி, பொருளாதார நிலை எல்லாவற்றிலும் உயர்ந்த ஓர் பிராமணக் குடும்பம். மயிலாப்பூரில் இருக்கும் லேடி சிவசாமிஅய்யர் உயர்நிலைப்பள்ளியும் திருவல்லிக்கேணி ஆஸ்பத்திரியும் இக்குடும்பதினர் முயற்சியில் தோன்றியவை. ஆயினும் மூட நம்பிக்கை கொண்டவர்கள். அம்புஜம் மூன்றவது பெண்ணாகப் பிறந்தது முதல் குறை.. பிறந்த மூன்றும் பெண்குழந்தைகள். அன்பும் ஆதரவும் கிடைக்க வில்லை. தோல்வியாதி இருந்ததால் பிறர் அருகில் வரமாட்டார்கள். ஒரு அக்கா இறக்கவும் ராசியில்லாதவள் என்ற வசைப்பாட்டு வேறு. வீட்டின் வெறுப்பில் அவர்களைக் கல்விக் கூடம் கூட அனுப்பாமல் செய்தது. இப்படியும் ஒரு குடும்பமா என்று நினைக்கின்றீர்களா? அவரது தந்தை பிரபல நீதிபதி.

அம்புஜத்தின் தோல் வியாதிக்கு சென்னை வெய்யில் என்பது தெரியவும் பங்களூர்

அனுப்பி வைக்கப்பட்டு சரியாகவும் கொண்டு வரப்பட்டார். வெகு நாட்கள் கழித்து ஓர் தம்பி பிறந்தான் ஆனால் அந்தத் தம்பியைக் கொஞ்சக் கூட அவர்களை அனுமதிக்கவில்லை. முதலில் கல்வி மறுக்கப்பட்டாலும் வீட்டில் இருந்து கொண்டு படிக்க அனுமதி கிடைத்தது.

ராஜாஜி அவர்கள் வெளி நாடு சென்று திரும்பி வந்த பொழுது இவர்கள் வீட்டில் வரவழைக்கப்பட்டு விருந்து கொடுத்தனர். கடல் கடந்து செல்வது பிராமண ஆச்சாரத்தின்படி குற்றம். எனவே அப்படிப்பட்ட ஓர் பிராமணனைக் கூப்பிட்டு விருந்து கொடுத்ததால் அம்புஜத்தின் பாட்டி இனி ஒரு டம்ப்ளர் தண்ணீர் கூட அந்த வீட்டில் குடிக்க மாட்டேன் என்று வீட்டைவிட்டுச் சென்று விட்டார். இது அம்புஜத்தின் மனத்தில் சாதி, மூடப்பழக்கம் இவைகளின் மீது வெறுப்பை ஏற்படுத்தியது.

இதனை எழுதும் பொழுது என் பிள்ளைப் பருவம் நினைவிற்கு வருகின்றது. சிறையில் பல இனத்தவருடன் வாழ்ந்தது, உணவு சமைத்து உண்டது இதனால் என் தந்தையும் பிராமணர்களுக்கு ஆகாதவரானார். ஐந்து ஆண்டுகள் கழித்து மனைவியையும் மகளையும் பார்க்க வந்த என் தந்தை வீட்டைவிட்டு வெளியில் அனுப்பப்பட்டார். என் மனத்தில் சாதி மீது வெறுப்பை முதலில் விதைத்த அனுபவம் அது.

உலக வரலாறு தெரிந்து கொள்ள வேண்டும். பிறப்பிலே எவனும் உயர்ந்தவன் என்றோ தாழ்ந்தவன் என்றோ கிடையாது. ஏழைகளின் உழைப்பிலே வாழும் கூட்டம் ஒருபுறம், அவர்களை ஏணியாக வைத்துக் கொண்டு தன்னை வளர்த்து வரும் கூட்டம் இன்னொருபுறம். பிரிவினைகள் மனித நேயத்தை அழிக்கும் ஓர் விஷப்பூச்சி. அது எந்த தோற்றத்தில் வந்தாலும் சரி. மாற்றுக் கருத்துக்கள் இருக்கும். இது என் கருத்து. அவ்வளவுதான்.

அம்புஜம்மாள் வாழ்க்கையில் அவருக்குக் கிடைத்த அனுபவங்கள் அவர்களைச் செதுக்கியது. ஓர் மனிதனின் வளர்ச்சி அவன் கருவாய் உருவாகவும் தொடங்கிவிடுகின்றது. குழந்தைதானே என நினைத்துப் பெற்றோர்கள் அதன் முன் பேசுவதும், சண்டை போடுவதும் இன்னும் பல செயல்கள் அதன் முன்னால் நடப்பது எல்லாம் குழந்தையைப் பாதிக்கின்றது. இன்று உலகத்தின் போக்கு பல விஷயங்களில் ஆரோக்கியமானதாக இல்லை. வீட்டிலாவது பெற்றோர்கள் அக்கறை எடுத்து நடந்து கொள்ளல் வேண்டும். அவர்களுக்கும் இப்பொழுது கவனச் சிதறல்கள்.

வரலாற்று நாயகிகளின் வரலாற்றைப் பார்க்கும் பொழுது அவர்களின் பிள்ளைப் பருவச் சூழ்நிலை அவர்களை எப்படி பாதித்திருக்கின்றது என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும். நம் கடமைகளைச் சரிவரச் செய்யாமல் பிள்ளைகளை மட்டும் குறை கூறுதல் சரியல்ல. ஒவ்வொன்றையும் விமர்சிக்கின்றோம். தவறுகள் வளரும் பொழுது அதனைத் தடுக்க எத்தனை பேர்கள் முன் வந்திருக்கின்றோம். உணவு வேண்டுமென்றால் சமைக்க வேண்டும். சமைக்கும் விதம் எழுதினால் சோறு கிடைத்துவிடுமா? இன்று பேச்சும் எழுத்தும் அதிகமாகி விட்டது. நல்லவர்கள், அறிஞர்கள் சிலராவது சேர்ந்து, நடக்கும் குற்றங்களைக் களைய என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று முயல்கின்றோமா ?

நல்லது செய்ய வேண்டும் என நினைத்து ஆக்க பூர்வமான செயல்களில் இறங்கினாலும் நம் முயற்சிகளை முடக்க இப்பொழுது தீய சக்திகள் மலிந்து விட்டன. தவறைச் சுட்டிக் காட்டிய ஒருவனை திருவண்ணாமலையில் கிரிவலம் வரும் பாதையில் கொன்றதைச் செய்தியாகப் பார்க்கின்றோம். இருக்கும் தைரியமும் போய்விடும். பிரிவினை வாதங்களை விடுத்து ஒன்றுபடும் முயற்சியை முதலில் எடுக்க வேண்டும். அதுவும் முடியுமா? பழங்கதை பேசி, பிறர்மேல் பழி சுமத்தி ஒன்றைப் பலவாக்கிக் கொண்டிருக்கின்றோம். நல்ல இயக்கங்கள் தோன்றினாலும் காலப் போக்கில் அவைகளும் வியாபார ஸ்தலமாவதைக் காண்கின்றோம். நல்ல மனம் படைத்தவர்கள் இன்னும் இருக்கின்றார்கள். திகைத்துப் போய் அயர்ந்து இருக்கின்றார்கள். தீய சக்தி ஓங்கிவிட்டது. நம் நாட்டில் மட்டுமல்ல. உலகம் முழுவதும் காணும் காட்சிகள் அனலாய்ச் சுடுகின்றன. இந்த உலகின் எதிர்காலம் என்ன?

– தொடரும்



# அடிப்படை வசதிகள் இல்லாத
# சென்னை மாநகர பேருந்து நிலையங்கள்

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள பேருந்து நிலையங்களில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் பயணத்தின் போது பல இன்னல்களை எதிர்கொள்வதாக பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சென்னை மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் அரசுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்தப் பேருந்துகளில் தினசரி லட்சக்கணக்கான பயணிகள் பயணிக் கின்றனர். நீண்ட பயணங்கள் மேற்கொள்ளும் பயணிகள் வசதிக்காக ஒரு குறிப்பிட்ட இடை வெளியில் பேருந்து நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளது. அதன்படி சென்னையில் 30 க்கும் மேற்பட்ட பேருந்து நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்களானது மூன்று அமைப்புகளின் கீழ் பராமரிக்கப்படுகின்றன.

சென்னை பிராட்வே பேருந்து நிலையமானது சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் வருகிறது. சென்னை கிண்டி பேருந்து நிலையத்தை சிப்காட் பராமரித்து வருகிறது. இதைத் தவிர்த்து பணிமனைகளுடன் கூடிய 15 க்கும் மேற்பட்ட பேருந்து நிலையங்களை மாநகர் போக்குவரத்து கழகம் பராமரித்து வருகிறது. இந்தப் பேருந்து நிலையங்களில் முழுமையான அடிப்படை வசதிகள் செய்யப்படாத காரணத்தால் பயணத்தின் போது பல இன்னல்களை எதிர் கொள்வதாக பொது மக்கள் குற்றம் சாட்டு கின்றனர். இதனால் இனிதாக அமைய வேண்டிய பயணம் வெறுப்பாக மாறி வருவதாவும் அவர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். பிராட்வே பேருந்து நிலையத்தில் சென்று வரும் பேருந்துகள் அனைத்தும் டான்ஸ் ஆடிக் கொண்டேதான் வருகின்றன. அந்த அளவிற்கு சாலைகள் அனைத்து குண்டும் குழியுமாக உள்ளன.

இதைத்தவிர்த்து இந்தப் பேருந்து நிலையத்தில் போதுமான குடிநீர் மற்றும் கழிப்பிட வசதி இல்லாத காரணத்தால் பெரும்பாலான பயணிகள் பேருந்துகளுக்கு பின்புறம் சென்று சிறுநீர் கழிக்கின்றனர். இதனால் சுகாதார சீர்கோடு ஏற்படுகிறது. மழை காலங்களில் அசுத்தங்கள் அனைத்தும் பஸ் நிலையத்துக்கள் வந்துவிடு கின்றன. இதனால் நடமாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சென்னையின் முக்கிய வர்த்தக பகுதியான தி.நகர் பேருந்து நிலையத்தில் 2 கட்டண கழிப்பிடங்கள் மட்டுமே உள்ளது. இலவச குடிநீர் வசதி செய்து தராத காரணத்தால் பெரும்பாலான மக்கள் கடைகளில் விற்கும் பாட்டில் குடிநீரைத்தான் வாங்கி பயன்படுத்து கின்றனர். வடபழனி பேருந்து நிலையத்தில் பயணிகள் உட்காருவதற்கான வசதிகள் செய்து தரப்படவில்லை. மேலும் இருக்கைகள் உடைந்து இருப்பதால் பயணிகள் மணி கணக்கில் நின்று இருக்க வேண்டிய நிலை உள்ளது.

சமீபத்தில் பொது மக்கள் மற்றும் ஊழியர்களின் பயன்பாட்டுக்காக கழிவறை கட்டப்பட்டது. ஆனால் பல மாதங்கள் ஆகியும் அது திறக்கப்படவில்லை. இதைப்போன்றுதான் கிண்டி பேருந்து நிலையமும் சுகாதார சீர்கேடுகளில் மூழ்கி இருக்கிறது. இங்கு இருக்கும் கழிவறைகள் அனைத்தும் முறையான பராமரிப்பு இல்லாத காரணத்தால் மிகவும் மோசமாக நிலையில் உள்ளன. அடையாறு பேருந்துநிலையத்தில் உள்ள அனைத்து கழிவறைகளும் மூடி வைக்கப்பட்டுள்ளன. இதனால் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர் அனைவரும் திறந்த வெளியில்தான் சிறுநீர் கழிக்கின்றனர். சென்னை முக்கிய பகுதிகளின் நிலைமையே இப்படி என்றால் புறநகர் பகுதிகளில் நிலைமை இதை விட மோசமாக உள்ளது. பல்லாவரம் பேருந்து நிலையத்தின் இரும்புக் கூரைகள் அனைத்தும் துரு பிடித்துக் காணப்படுவதுடன், ஒரு சில இடங்களில் இரும்பு சீட்டுகள் பெயர்ந்தும் காணப்படுகிறது.

இதனால் அவைகள், எந்த நேரத்தில் தலையில் விழுமோ என்ற அச்சத்தில் பயணிகள் உள்ளனர். பேருந்து நிலையத்தின் உட்புற சாலைகள் அனைத்தும் சேதமடைந்து, கழிவு நீர் தேங்கி காணப்படுவதால்,அந்த இடமே சுகாதாரசீர்கேடு அடைந்து காணப்படுகிறது. மேலும் பேருந்து நிலையத்தின் உள்ளே பயணி களுக்கான அடிப்படை வசதிகளான, நல்ல குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் இல்லாததால் வயோதிகர்கள்,நோயாளிகள் மற்றும் பெண்கள் ஆகியோர் திண்டாடும் சூழ்நிலை ஏற்படுகிறது.

வண்ணாரப்பேட்டையில் இருந்து விம்கோ நகர் வரை மெட்ரோ ரயில் விரிவாக்கப் பணி நடைபெற்று வருகிறது . இதற்காக ஏற்கனவே செயல்பட்டு வந்த திருவொற்றியூர் அஜாக்ஸ் பேருந்து நிலையம் சற்று தள்ளி ஜெயகோபால் கரோடியா அரசு மேல்நிலை பள்ளிக்கு அருகில் இடமாற்றம் செய்யப்பட்டது. தற்போது இந்த பேருந்து நிலையம் திறந்தவெளியில் இருப்பதால் கழிவறை,குடிநீர் போன்ற எந்தவிதமான அடிப்படை வசதியும் கிடைக்காமல் பயணிகள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

திருவேற்காடு பேருந்து நிலையத்தில் உள்ள கழிவறைகள் மிகவும் குறுகியதாகவும் பயன்படுத்துவதற்கு சிரமமாக உள்ளன. இதே போல பூந்தமல்லி குமணன்சாவடி பேருந்து நிறுத்தம், போரூர் குன்றத்தூர் சாலையில் உள்ள பேருந்து நிறுத்தம், காட்டுப்பாக்கம் பேருந்து நிறுத்தம் உள்ளிட்ட பல பகுதிகளில் உள்ள பேருந்து நிறுத்தங்களில் நிழற்குடைகள் இல்லாததால் பயணிகள் வெயிலிலும், மழையிலும் நிற்க வேண்டியுள்ளது. புறநகர்களை இணைக்கும் முக்கிய சாலையான வேளச்சேரி மெயின் சாலையில் மேடவாக்கம் கூட் ரோடு, மேடவாக்கம் பஜார் ஆகிய பஸ் நிறுத்தங்களில் நிழற்குடை இல்லை. இதனால் மழைக்காலங்களில் பயணிகள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள்.



செந்தமிழ் நகர் பஸ் நிறுத்தத்தில் சாலையை ஒட்டி கழிவுநீர் ஆறாக ஓடுகிறது. இதனால் துர்நாற்றம்வீசுவதால்பேருந்துக்காககாத்திருக்கும் பயணிகள் அவதிக்குள்ளாகிறார்கள் இவ்வாறு சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள பேருந்து நிலையங்கள் போதிய அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் பொது மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். மேலும் பேருந்து கட்டணத்தை உயர்த்திய அரசு அதற்கு ஏற்றாற்போல் அடிப்படை வசதிகளையும் செய்து தர வேண்டும் என்றும் பொது மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

மாநகர் போக்குவரத்து கழகத்தில் ஆயிரக்கணக்கான பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். ஒவ்வொரு பேருந்து நிலையத்திலும் இவர்களுக்கான ஓய்வு அறைகள் அமைக்க வேண்டும். ஆனால் பல பேருந்து நிலையங்களில் ஓய்வு அறைகள் இல்லை என்று ஊழியர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதனால் பேருந்துகளின் உள்ளேதான் ஓய்வு எடுப்பதாகவும், பேருந்து நிலையங்களில் ஓரத்தில் அமர்ந்துதான் உணவு அருந்துவதாகவும் அவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

- V.அருணாசலம்

# பாஜகவுக்கு எதிராக சந்திரபாபு நாயுடு



சந்திரபாபு நாயுடு பாஜக உடனான கூட்டணி உறவை முறித்துக் கொண்ட இவர், தற்போது பிரதமர் மோடிக்கு எதிராக தேசிய அளவில் போர் தொடுக்கத் தயாராகி வருகிறார். ஆந்திர அரசியலில் கடந்த 9 ஆண்டுகளாக அதிரடி மாற்றங்கள் அரங்கேறி வருகின்றன. தென்னகத்தின் பெரிய மாநிலமான ஆந்திரப் பிரதேசம் இரண்டாகப் பிரிந்தது. இதனால் ஆந்திராவில் காங்கிரஸ் கட்சி கரையத் தொடங்கியது. காங்கிரஸ் இடத்துக்கு, ஜெகன்மோகன் ரெட்டி தலைமையில் உருவான ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் வரத் தொடங்கியது.

தொடர்ந்து, 2014-ல் மக்களவை தேர்தலுடன் ஆந்திர சட்டப்பேரவைக்கு நடந்த தேர்தலில் பாஜகவுடன் இணைந்தார் சந்திரபாபு நாயுடு. நடிகர் பவன் கல்யாணும் ஆதரவு தெரிவிக்க, ஆந்திராவில் ஆட்சியை பிடித்தார். மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையிலும் அவரது தெலுங்கு தேசம் கட்சி இடம்பெற்றது. 4 ஆண்டுகள் வரை பாஜகவுடன் உறவு நீடித்தாலும், ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து உள்ளிட்ட வாக்குறுதிகளை மத்திய அரசு நிறைவேற்றவில்லை. இதனால் கோபம் அடைந்த நாயுடு, மத்திய அமைச்சரவையில் இருந்து விலகியது டன் பாஜகவுடன் கூட்டணி உறவையும் முறித்துக்கொண்டார்.

இதனால் 2019 தேர்தலுக்காக ஆந்திராவில் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் மற்றும் பவன் கல்யாண் மீது பாஜகவின் பார்வை விழுந்தது. விடுவாரா நாயுடுஞ் ஆந்திர மக்களுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்காமல் ஏமாற்றிய மோடிக்கு எதிராகத்தான் போர் என அறிவித்தார். முதலில் காங்கிரஸ் அல்லாத 3-வது அணி என திட்டமிட்ட சந்திரபாபு நாயுடு பிறகு தனது வியூகத்தை மாற்றிக் கொண்டார். காங்கிரஸுடன் இணைந்து மோடியை எதிர்ப்பது என்ற முடிவுக்கு வந்தார்.

காங்கிரஸுடன் அணி சேர்வதால் ஆந்திராவில் காங்கிரஸ் கட்சியின் ஓட்டுகளை பெறலாம். அதே சமயத்தில் ஒய்எஸ்ஆர் காங்கிரஸில் உள்ள அதிருப்தியாளர்களை வெளி யேறச் செய்து

அக் கட்சியை பலவீன மாக்கலாம். அடுத்து, தெலங்கானாவில் பலம் வாய்ந்த டிஆர்எஸ் கட்சியை, அங்கு முக்கிய எதிர்க்கட்சியாக உள்ள காங்கிரஸுடன் இணைந்து வீழ்த்தலாம். இவ்வாறு ஒரே கல்லில் 3 காய்களை அடிக்கலாம் என சந்திரபாபு நாயுடு திட்டமிட்டுள்ளார். அதே சமயத்தில் பாஜகவுக்கு எதிரான சுமார் 15 கட்சிகளை காங்கிரஸ் அணியில் சேர்த்து 2019 தேர்தலில் வெற்றி பெற்றால், மத்திய அமைச் சரவையில் இடம்பெற்று முக்கியத் துறைகளை பெறலாம். மேலும் சிறப்பு அந்தஸ்து உள்ளிட்ட திட்டங்களை பெற்று ஆந்திராவின் மேம்பாட்டுக்கு வழி வகுக்கலாம் எனவும் திட்டமிட்டுள்ளார்.

சந்திரபாபு நாயுடு கடந்த அக்டோபர் 27-ம் தேதியும் பிறகு கடந்த 1-ம் தேதியும் டெல்லி சென்றார். அங்கு சரத் பவார், சரத் யாதவ், பரூக் அப்துல்லா, அர்விந்த் கேஜ்ரிவால், மாயாவதி, முலாயம் சிங் யாதவ், சீதாராம் யெச்சூரி, சுரவரம் சுதாகர் ரெட்டி, யஷ்வந்த் சின்ஹா என பல்வேறு எதிர்க்கட்சித் தலைவர்களை சந்தித்தார். அப்போது 3-வது அணியாக இல்லாமல், காங்கிரஸுடன் இணைந்து 2019 தேர்தலை சந்தித்தால், பாஜவை வீழ்த்தலாம் என பேச்சு நடத்தினார். பிறகு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியையும் அவர் சந்தித்தார். பரம எதிரியான காங்கிரஸுடன் சேர்ந்து பாஜகவை வீழ்த்தும் தெலுங்கு தேசம் கட்சியின் திட்டம் யாரும் எதிர்பார்க்காத ஒன்று. இது ஆந்திர அரசியல் மட்டுமின்றி தேசிய அரசியலையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

டெல்லியில் இருந்து திரும்பிய வேகத்தில் பெங்களூரு சென்ற நாயுடு, அங்கு முன்னாள் பிரதமர் தேவகவுடா, அவரது மகனும் கர்நாடக முதல்வருமான குமாரசாமியை சந்தித்தார். பிறகு சென்னை வந்த அவர் திமுக தலைவர் ஸ்டாலினை சந்தித்தார். பிறகு அளித்த பேட்டியில் பிரதமர் மோடியை விட ஸ்டாலின் திறமையானவர் என பாராட்டினார். மேலும் அதிமுக அரசை 'ரிமோட் அரசு' என விமர்சித்து அக்கட்சியின் உதவியை நாட மாட்டோம் என உணர்த்தினார். ஒரு காலத்தில், ஆந்திர மாநிலம் காங்கிரஸின் கோட்டையாக விளங்கி யது. இதனை உடைத்தெறிந்தவர் என்.டி.ராமாராவ். காங்கிரஸுக்கு எதிராக தெலுங்கு தேசம் கட்சியை தொடங்கி, வெறும் 9 மாதங்களில் ஆட்சியை பிடித்தார். இவருக்கு பிறகு சந்திரபாபு நாயுடு பொறுப்பேற்றாலும் அவ்வளவு எளிதாக தெலுங்கு தேசம் கட்சியை காங்கிரஸால் வீழ்த்த முடியவில்லை. ஆந்திராவில் கடந்த 36 ஆண்டுகளில் காங்கிரஸ் 10 ஆண்டுகள் மட்டுமே ஆட்சி புரிந்துள்ளது.

தெலங்கானா மாநிலம் அமைந்த பின்னர், ஆந்திராவில் காங்கிரஸ் இருக்குமிடம் தெரியாமல் போனது. இந்நிலையில் பரம எதிரியாக விளங்கிய மற்றும் செல்வாக்கு இழந்த காங்கிரஸுடன் தெலுங்கு தேசம் இணைவதை பலரும் வியப்புடன் பார்க்கின்றனர். இரு கட்சிகளிலும் இதைப் பிடிக்காத சிலர் வெளியேறி வருகின்றனர். இது சந்தர்ப்பவாத அரசியல் என்றும் என்டிஆரின் ஆன்மா சந்திரபாபு நாயுடுவை மன்னிக்காது என்றும் எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன.

ஆந்திராவில் தற்போதுள்ள அரசியல் சூழலில் ஜனசேனா கட்சித் தலைவர் பவன் கல்யாண் 2019 தேர்தலில் தனித்து களமிறங்குதாக அறிவித்துள்ளார். என்றாலும் தேர்தல் நெருங்கும்போது இவர் பாஜகவுடன் செல்ல வாய்ப்புள்ளது. மேலும் ஒய்எஸ்ஆர் காங்கிரஸும் பாஜகவுடன் நெருங்க வாய்ப்புள்ளது. இந்த இரு கட்சிகளில் ஒன்றுடனோ அல்லது இரண்டுடனோ பாஜக கூட்டணி அமைக்க வாய்ப்புள்ளது. சந்திரபாபு நாயுடுவுடன் சேர்வதால் ஆந்திராவில் இழந்த செல்வாக்கை மீண்டும் படிப்படியாக பெறலாம் என்பது காங்கிரஸ் கட்சியின் திட்டமாக உள்ளது.

இத்தகைய சூழலில் சந்திரபாபு நாயுடு தனது 40 ஆண்டுகால அரசியல் அனுபவம் மூலம் இந்திய அரசியலில் இம்முறை பெரும் மாற்றத்தை கொண்டு வருவார் எனவும், ஆந்திரா வில் மீண்டும் ஆட்சியை கைப்பற்று வதுடன் தெலங்கானாவில் டிஆர்எஸ் கட்சிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிப்பார் எனவும் ஆந்திர அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். என்றாலும் அவரது சாணக்கியம் பலிக்குமா என்பது 2019 தேர்தலுக்குப் பிறகே தெரியும்.

- M.தரணி




# பாராட்டுகளை குவிக்கும் பள்ளி ஆசிரியர்

கஜா புயல் வேதாரண்யம் அருகே கரையை கடக்கும் என்று 15 நாட்களுக்கு முன்பே அரசுப் பள்ளி ஆசிரியர் ந.செல்வகுமார் துல்லியமாக கணித்து கூறிவந்தார். அதேபோல் புயல் பயணிக்கும் பாதை மற்றும் அதனால் ஏற்படவுள்ள பாதிப்புகள் குறித்தும் கடந்த 4 நாட்களாக அவர் எச்சரித்து வந்தார். அவரது கணிப்புகள் பெருமளவில் இப் போது உண்மையாகி உள்ளன. அதனால் அவருக்கு பல்வேறு தரப்பினரிடமிருந்து பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

மன்னார்குடியை சேர்ந்தவர் ந.செல்வகுமார். அரசுப் பள்ளி ஆசிரியரான இவர், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக தன்னார்வ அடிப்படையில் வானிலையை கணித்து கூறி வருகிறார். இவர் 15 நாட்களுக்கு முன்பே இந்த புயலை கணித்ததுடன், அது வேதாரண்யம் அருகே கரையை கடக்கும் என்பதை உறுதிபட தெரிவித்திருந்தார். ஆனால் இந்திய வானிலை ஆய்வு மையம், தொடக்கத்தில் கடலூர் ஸ்ரீஹரிகோட்டா இடையே புயல் கரையை கடக்கும் என்று தெரிவித்திருந்தது. மேலும், புயல் வலு குறைந்து கரையை கடக்கும் என்றும் தெரிவித்திருந்தது.

இது தீவிர புயலாகவே கரையை கடக்கும் என்பதில் செல்வகுமார் உறுதியாக இருந்தார். அவர் கணித்ததுபோலவே தற்போது நடந்திருப்பதால், அவருக்கு விவசாயிகள், மீனவர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பாராட்டுகள் குவிந்து வருகிறது. இதுதொடர்பாக வானிலை ஆர்வலர் ந.செல்வகுமார் கூறியது: விசாகப்பட்டினம் துறைமுகம் அருகே இறால் முட்டை பொறிப்பகத்தில் வேலைக்கு சேர்ந்தேன். அப்போது வானிலை தொடர்பான அறிவை வளர்த்துக் கொண்டு, அங்குள்ள மீனவர்களுக்கு வானிலை தொடர்பான தகவல்களை தெரிவித்து வந்தேன். 1996-ம் ஆண்டு நான் கணித்தபடியே மோசமான புயல் தாக்கி கடும் பாதிப்பு ஏற்பட்டது. அதிலிருந்து மீனவர்கள் என்னிடம் வானிலை நிலவரங்களை கேட்கத் தொடங்கினர்.

2000-ம் ஆண்டில் ஆசிரியர் வேலை கிடைத்து வலங்கைமான் பகுதிக்கு வந்தேன். அப்போது செல்போன் பிரபலமடைந்த நிலையில், அங்கு வானிலையை கணித்து எஸ்எம்எஸ் மூலமாக தெரிவித்து வந்தேன். எனது கணிப்பு சரியாக இருந்ததால், என் தகவலை பின் தொடர்வோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்தை தாண்டியது. தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைய கட்டுப்பாடுகளால், ஒரு சிம் கார்டில் இருந்து நாளொன்றுக்கு 100 பேருக்கு மேல் எஸ்எம்எஸ் அனுப்ப முடியவில்லை.

அதனால் 30 சிம் கார்டுகளை வாங்கி, தலா 100 பேருக்கு வானிலை தொடர்பாக எஸ்எம்எஸ் அனுப்பி வந்தேன். பின்னர் அதற்கும் தடை வந்தது. தொடர்ந்து, 150 வாட்ஸ்ஆப் குழுக் களை உருவாக்கி வானிலை நில வரத்தை அறிவித்து வந்தேன். அத்தனை குழுக்களையும் நிர்வகிக்க முடியாமல் கைபேசி முடங்கியது. அதனால் தற்போது 'நம்ம உழவன்' என்ற செயலி மூலம் தெரிவித்து வருகிறேன்.

இந்திய வானிலை ஆய்வு மைய இணையதள விவரங்கள் அடிப்படையில்தான் நான் கணித்து வருகிறேன். இந்த முறை ஓமன் மற்றும் மேற்கு வங்கம் அருகே நிலவிய எதிர் புயல்களின் செயல்பாடுகளுடன் கஜா புயலை ஒப்பிட்டு பார்த்து, வேதாரண்யம் அருகேதான் புயல் கரையை கடக்கும் என்று உறுதியாக கூறினேன்.

- குருதேவ்

தீபாவளி மது விற்பனை கடந்த ஆண்டை விட 70 கோடி அதிகம். இந்த ஆண்டு 330 கோடிக்கு மது விற்பனை செய்து சாதித்து இருக்கிறது தமிழகம். அதிர்ச்சியையும், வேதனையையும் தருகிறது. 2016 சட்டப்பேரவை தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன். முதல்வராக ஜெயலலிதா இருந்த நேரம். ஊர் ஊராக வீதி வீதியாக டாஸ்மாக்கிற்கு எதிராக தன்னெழுச்சியாக பெண்களும், ஆண்களும் திரண்ட நேரம். பல கடைகள் அடித்து உடைக்கப்பட்டன. தீ வைக்கப்பட்டன. மதுவுக்கு எதிராக தமிழகத்தின் கோபம் உக்கிரமாக இருந்தது. போலீசாரை வைத்து வழக்கம் போல் போராட்டத்தை முடக்கி விடலாம் என்ற ஜெயலலிதாவின் முயற்சி தோற்றுப்போனது. விளைவு, அதிமுக தேர்தல் அறிக்கையில் டாஸ்மாக் கடைகள் படிப்படியாக மூடப்படும் என்று அறிவிக்கும் அளவுக்கு வந்தது.

அவர் 2016ல் மீண்டும் முதல்வராக பதவி ஏற்ற போது முதற்கட்டமாக 500 கடைகளை மூடும் உத்தரவில் கையெழுத்து போட வைத்தது மக்களின் அந்த கிளர்ச்சி. இந்த இரண்டரை ஆண்டுகளில் எங்கே போனது அந்த கோபம்?. ஜெயலலிதாவுக்கு எதிராகவே கிளர்ந்த மக்கள், அவரது மனதையே மாற்ற வைத்த போராட்டங்கள் எல்லாம் இந்த ஆண்டு தீபாவளி மது விற்பனையில் மூழ்கடிக்கப்பட்டு விட்டதே!.

இன்னும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் வர இருக்கிறது. அப்போது இன்னும் அதிகமாய் குடித்து குடிகார சாதனையை கொண்டாட காத்திருக்கிறதா?. சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை அனைவரையும் மதுவுக்கு அடிமையாக்கி அதன் மூலம் மது அடிமை மாநிலமாக தமிழகத்தை மாற்றி, சிந்திக்கக்கூட திறன் இல்லாத ஒரு சந்ததியை நாம் வளர்த்துக்கொண்டு இருக்கிறோமா என்ற கேள்வி வருகிறது. ஜெயலலிதா வழியில் ஆட்சி நடத்தும் அதிமுக, தேர்தல் வாக்குறுதிப்படி படிப்படியாக மதுக்கடைகளை மூடாதது ஏன்?. அதை தட்டிக்கேட்கும் உணர்ச்சி இன்றைய நிலையில் தமிழகத்திற்கு இருக்கிறதா?. டாஸ்மாக்கால் எத்தனை குடும்பங்கள் அழிந்து போய் இருக்கின்றன?. கணக்கு விவரங்கள் கண்ணீரை அல்லவா தருகின்றன.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் டார்கெட் வைத்து தீபாவளி மது விற்பனை நடந்து இருக்கிறது. அதை எட்டி சாதனை புரிந்து விட்டதாக மார் தட்டுகிறது அரசு. சுகாதாரத்தில், கல்வியில், போக்குவரத்து வசதிகளில், வேலைவாய்ப்பில், தொழில்வளர்ச்சியில் என அத்தனை துறைகளிலும் அனைத்து மாநிலங்களையும் விஞ்சி விட்டதாக காட்டுங்கள். அதை விடுத்து மது விற்பனையில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு சாதித்து இருப்பதாக கூறுவது தமிழகத்திற்கு வேதனை.

- M.சத்தியராஜ்

## எங்கே சென்று கொண்டு இருக்கிறது தமிழகம்?





# சிந்தனை முத்துக்கள்



ரூம்மெட் ஒருத்தன் பக்கத்து கடைல பிரியாணி வாங்கி சாப்பிட்டுட்டு மிச்சமான எலும்ப போட இங்க சுத்துன நாய எங்கடான்னு கேக்குறான்...

நீ எலும்ப போட தேடுறதே அந்த நாயோட எலும்பு தான்னு இந்த நாய் கிட்ட எப்பிடி சொல்லுவேன்...

கால்ல ஏதோ கடிச்சுது, என்னானு பாத்தா நல்ல பாம்பு...

அப்புறம்..!?

நல்லவேளை, டெங்கு கொசுன்னு நினைச்சு பயந்துட்டேன்...






## கருணை

கருவுற்றால்
ஒரு குழந்தைக்கு மட்டும்
தான் அன்னையாக
முடியும்
ஆனால்
கருணையுற்றால்
ஆயிரம்
குழந்தைகளுக்கு கூட
அன்னையாக முடியும்











வெற்றிகளை சந்தித்தவன் இதயம் பூவை போல் மென்மையானது தோல்வி மட்டுமே சந்தித்தவன் இதயம் இரும்பை விட வலிமையானது.

எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.

(பொன்மொழிகள்)

- விவேகானந்தர்















ஒரு முனையில் அடிவாங்கும் பாறைக்கே வலி அதிகம் என்றால்,

இரு முனையிலும் அடி வாங்கும் உளியின் நிலை என்ன?

என்னை கேவலமாக பார்த்து சென்ற பணக்காரர்களெல்லாம் மழை வெள்ளத்திற்கு அடைக்கலம் தேடி இன்று என்னிடம் தஞ்சம்

நான் அரசுப்பள்ளி (கார்பரேஷன் ஸ்கூல்)

# அச்சுறுத்தும்

# அவதூறுச் சட்டம்?

கருத்துச் சுதந்திரத்துக்கும் நற்பெயருக்குக்கான உரிமைக்கும் இடையே சமநிலை இருக்க வேண்டும் என்று சொல்வது வழக்கமானதுதான். தவறாகவும் அவதூறாகவும் அமைந்த வார்த்தைகளைப் பொதுவில் பேசுவதற்கு எந்தவொரு சட்ட அமைப்பும் அனுமதிக்காது. தண்டனைகளிலிருந்து விலக்கும் அளிக்காது. அவதூறுச் சட்டம் என்பது இரு தரப்புகளையும் ஏற்றுக் கொள்ளாமல் நடுநிலையாக நின்று தீர்வு சொல்வதற்கான ஒரு கருவி.

ஆனால், அவதூறுச் சட்டத்தின் அமைப்பும் வடிவமும் தரப்புக்கேற்றபடி சமநிலை தவறி விடுகிறதா அல்லது நற்பெயரைப் பாதுகாப்பது போன்ற தோற்றத்தை மட்டும் காட்டுகிறதா, பேச்சுரிமையும் கருத்துச் சுதந்திரமும் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறதா என்பதையும் அடிக்கடி தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

இந்தியாவின் குற்றவியல் அவதூறுச் சட்டம் சந்தேகத்திற்கிடமின்றி இரண்டாவது வகையைச் சேர்ந்ததுதான். காலனியத்தின் எச்சமாக இன்னும் தொடரும் அச்சட்டம், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அரசியல் விமர்சனங்களை அடக்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 499, அதிகாரத்தில் இருப்பவர்களுக்குத் தங்கள் மீதான கடும் விமர்சனங்களையும் அவர்கள் விருப்பத்துக்கு மாறான கருத்துகளையும் அடக்குவதற்கான ஆயுதத்தை அளித்திருக்கிறது.

முதலாவதாக, மற்ற நாடுகளைப் போல இல்லாமல் இந்தியாவில் அவதூறு என்பது ஒரு குற்றச் செயல் (அது வெறும் உரிமைத் தீங்கு மட்டுமல்ல). அதற்கு அளிக்கப்படும் தண்டனை சமூகக் களங்கத்தோடு சிறைத் தண்டனையையும் உள்ளடக்கியது.

இரண்டாவதாக, அவதூறு வழக்கில் புகார் அளிப்பவர் தனது நற்பெயர் பாதிக்கப்படுகிறது என்று கூறுவதே சட்டபூர்வமான நடவடிக்கையைத் தொடங்க போதுமானது. எதிர்வாதங்களை விசாரணை தொடங்கிய பிறகுதான் முன்வைக்க முடியும். இடைப்பட்ட காலத்தில் என்ன



நடக்கும்? குற்றம்சாட்டப்பட்டவர் பல தடவை நீதிமன்றத்துக்கு இழுத்தடிக்கப்பட்டிருப்பார். நீதிமன்ற நடைமுறைகளே தண்டனையாக அமைந்துவிடும். மூன்றாவதாக, குற்றம்சாட்டப்பட்டவருக்கான எதிர்வாதங்களும்கூட அவரது கருத்துரிமைக்குப் போதுமான பாதுகாப்பை அளிக்கவில்லை. ஒரு உரிமையியல் அவதூறு வழக்கில் குற்றப் பொறுப்பிலிருந்து விடுபடுவதற்கு எதிர்வாதி தன்னுடைய கருத்து உண்மையானது என்று நிரூபித்தாலே போதுமானது.

குற்றவியல் அவதூறு வழக்கிலோ, குற்றம் சாட்டப்பட்டவர் தனது கருத்து உண்மையானது என்பதோடு பொதுநல நோக்கத்தில் அது கூறப்பட்டது என்பதையும் நிரூபிக்க வேண்டும். நமது சட்ட அமைப்பில் உரிமையியல் அவதூறு நடைமுறைகளின் முடிவுகளைப் பொறுத்தவரையில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு அதிக அனுகூலங்கள் இருக்கும் நிலையிலும், கடுமையான குற்றவியல் நடைமுறைகள் முரண்பாடான சூழலுக்கே இட்டுச்செல்கிறது.

குற்றவியல் அவதூறுக் குற்றச்சாட்டுகள் அரசியல் சாசனத்தின்படி செல்லும் தன்மை கொண்டதா என்பது பற்றி உச்ச நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வின் முன்பு 2016-ல் நடந்த வழக்கில் இந்த வாதங்களோடு மேலும் சில வாதங்களும் முன்வைக்கப்பட்டன.

துரதிர்ஷ்டவசமாக, அப்போதைய நீதிபதி தீபக் மிஸ்ரா அந்த வாதங்களைப் பெரிதும் பொருட்படுத்தாமல், "பிரிவு 499 அரசியல் சட்டத்தின்படி செல்லுபடியாகும், அந்த சட்டப் பிரிவு தனிநபர்களின் நற்பெயரைப் பாதுகாக்கிறது" என்று எளிதாக முடிவுசெய்துவிட்டார்.

ஒரு உரிமையியல் தீங்கைக் குற்றம் என்று தீர்மானிப்பதில் உள்ள இந்தச் சமநிலையற்ற தன்மையும் இந்தியக் குற்றவியல் அவதூறுச் சட்டத்தின் தெளிவில்லாத பல்வேறு நடைமுறைகளும் கருத்துரிமையை எப்படி வாட்டி வதக்கின்றன என்பதை நீதிமன்றம் கணக்கில் எடுத்துக்கொள்ளவே இல்லை.

அதிகாரத்தில் இருப்பவர்களாலும் பிரபலமானவர்களாலும் அடிக்கடி தங்களுக்கு நிகழ்த்தப்பட்ட பாலியல் துன்புறுத்தல்களைப் பற்றி பெண்கள் தெளிவாகப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். பாலியல் வேட்டையாகவும் தவறான நடத்தையாகவும் இருந்தபோதிலும் அதைச் சில நேரங்களில் ஒரு சட்டபூர்வமான குற்றமாக வரையறுக்க முடியாதவாறு, திட்டமிட்ட வகையில் ஆண்கள் நடந்துகொள்வதை நாம் அனைவரும் எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதை இந்த இயக்கம் வெளிப்படுத்தியிருக்கிறது.

நெறிகளிலும் எப்படி வறண்டு கிடக்கிறார்கள் என்பது பொதுவெளிக்கு வந்திருக்கிறது. ‘நானும்’ இயக்கம் அமிழ்ந்து கிடந்த அனுபவங்களை மேலெழச் செய்திருக்கிறது, நடந்ததை எளிதில் வெளியே சொல்ல முடியாது என்று இவ்வளவு காலமாக எண்ணியிருந்தவர்களுக்கு அதைச் சொல்வதற்கான ஒரு புதிய வார்த்தையைத் தந்திருக்கிறது.

குற்றவியல் அவதூறு வழக்கு தொடுப்பதற்கான நோக்கம், வெளிப்படையானது. கருத்துரிமையின் புதிய வடிவமான ‘நானும்’ இயக்கத்தை மௌனமாக்குவதற்காக அதிகாரத்தில் உள்ளவர்கள் அவதூறுச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வதை அனுமதிக்கலாமா? அதிகாரத்தில் இருப்போருக்கு குற்றவியல் அவதூறுச் சட்டம் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படலாமா?

மிக அவசியமான ஒரு மக்கள் இயக்கம் அவதூறுச் சட்டத்தால் அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருக்கிறது. நமது நீதிமன்றங்களுக்கு




பணியிடங்களில் உள்ள அதிகாரப் படிநிலைகள், வயது மற்றும் செல்வாக்கு நிலையில் உள்ள வேறுபாடுகள், தங்களது தொழில்களில் மிக உயர்ந்த இடங்களை வகிக்கும் ஆண்களால் கையாளப்படும் அதிகாரம், அந்த செல்வாக்கைத் தவறாகப் பயன்படுத்துவது ஆகியவை தொடர்பான பிரச்சினைகள் - இத்தகைய பிரச்சினைகள் நீண்ட காலமாக அடக்கிவைக்கப்பட்டவை, அவற்றைப் பற்றி எளிதில் வாய் திறக்க முடியாது - கடைசியில்தான் பொதுவிவாதத்துக்கு வந்திருக்கின்றன.

இது கொந்தளிப்பின் தருணம். மதிப்புக்குரியவர்கள் அறநெறிகளிலும் தார்மீக

அரியதொரு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. குற்றவியல் அவதூறுகள் அரசியல் சட்டத்தின்படி செல்லுபடியாகுமா என்பதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி இல்லையென்றாலும்கூட, தனக்கு விருப்பமில்லாத கருத்துகளை அச்சுறுத்தி, தொல்லைப்படுத்தி, மௌனமாக்குவதற்கு அதிகாரத்தின் கருவியாக அவதூறு வழக்குகளைப் பயன்படுத்த முடியாது என்பதை உறுதிப்படுத்தும்வகையில் சட்டப் பிரிவு 499-க்கான நீதிமுறை பொருள்விளக்கங்களை அளிப்பதற்கான வழிகள் நிறையவே இருக்கின்றன.

– ஆசிரியர்

# சாகாக் கலை

## எனப்படும்

# காயகல்பம்

கற்பம் என்பது உடலைக் காக்கும் மருந்து அல்லது உடலைக் கற்போல் மாற்றுகின்ற கருவி. கற்பம் உண்பவர், நீண்ட நாள் வாழ்வர் என்பதும், கற்பம் உண்டவர் நோயற்ற நிலையடைவார் என்பதும் பொது வழக்கு.

கற்பம் இரண்டு வகையாக உரைக்கப் பெறும். ஒன்று மருந்து கற்பம்; மற்றொன்று யோகக் கற்பம்.

'கற்பம்' எல்லாப் பொருளினும் சிறந்தது. அல்லது எல்லா முறையினும் சிறந்தது என்பதும் பொருந்தும்.

"காலமே யிஞ்சி யுண்ணக் காட்டினார் சூத்தி ரத்தில்
மாலையதி லேக டுக்காய் மத்தியானஞ் சுக்க ருந்த
சூலமே தேக மடா சுக்கிலத்தைக் கட்டி விடும்
ஞாலமே உனது விந்து நற்றேங் காய்போ லாமே"

காலையில் இஞ்சியும், கடும்பகலில் சுக்கும், மாலையில் கடுக்காயும் அருந்தி வந்தால் துரும்பான உடல் இரும்பாகும். விந்து கட்டி, இறுகும். என்பது இதன் கருத்தானாலும், இந்த முறை ஒன்று மட்டும் கற்பமல்ல. மருந்துகளில், மூலிகைளில், சாதன முறைகளில் கற்பங்கள் பல உள்ளன.

"கற்பமுறை முக்க டுகுணவி கற்பமுறை
மூவருக்கங் கட்டை முதலொடு நென் மாத்திரமன்
மூவருக்கங் கட்டையது முன்"

முக்கடுகு என்பது சுக்கு, திப்பிலி, மிளகு ஆகியன. முதிர்ந்த எருக் கங்கட்டையை வேருடன் கொணர்ந்து வரிசைப் படியே ஒரு மண்டலம், ஒரு நெல்லளவு, சுக்குடன் தண்ணீரில் உண்டால், வாதப் பிணியும், திப்பிலியுடன் உண்டால் பித்தப் பிணியும், மிளகுடன் உண்டால் ஐயப்பிணியும் அற்றுப் போகும் என்பதும் கற்ப முறையில் ஒன்றாகும்.

## வள்ளலார் அருளிய கல்ப மருந்து

மூன்று வகை நோயும் இருக்கவொட்டாமற் செய்வதே கற்பத்தின் சிறப்பு என்பதனால், கற்பம் என்பது உடலைக் காக்கும் மருந்தாகும். கற்பம் உண்டால், நெடுங்காலம் உயிர் வாழலாம். உடம்பு கற்வூணைப் போல் உறுதி கொண்டு விளங்கும். சித்தொளி தோன்ற வாழலாம்257 என்னும் அகத்தியர் வாக்கினால் கற்பத்தின் சிறப்பினை அறியலாம்.

**கற்பமுறை:**

'இருக்கவென்று மனம் உரைத்தால்' கற்பம் உண்க, என்று கற்ப நூல் கூறுகின்றது. இந்த உடலம் நீண்டநாள் நிலைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே கற்பம் என்னும் முறை கண்டறியப்பட்டிருக்கிறது.

"கேளப்பா மண்டலந்தான் ஒருமா வீதம்
கொண்டாக்கால் சிவனவனாய்க் கூடி வாழ்வான்
கொள்ள கற்பமிது கொண்டா யானால்
கோடியுகஞ் சென்றாலுமோ சாவில்லைதான்"

ஒரு சிறிய அளவு, ஒரு மண்டலம் (48 நாள்கள்) கற்பம் உண்டால் மரணமில்லை என்று அறிவிக்கப் படுகிறது. இம்மருந்தை உண்பது எளிது-அரிது எனக் கருதத் தோன்றுகிறது. ஆனாலும்,

"உருக்கமுடன் பெண்ணாசை பிள்ளை யாற
ஒட்டினால் கற்பமெல்லாம் ஓடிப் போமே"

கற்பம் உண்ணுகின்ற காலத்திலும், உண்டபின்பும் ஆசைக்கும், பாசத்திற்கும் இடமளித்தால் கற்பம் உண்டது வீணாகும் என்று



உரைக்கப்படும். இருப்பினும், உடலில் நோய்கள் தங்காமல் பாதுகாக்க கற்பம் வகை செய்யும். கற்பங்கள், காசினியில்நூற்றெட்டுக்கப்ப மானால், பேசாது மவுனமுற்றுக் கொள்ள வேண்டும் என்று, கடுமையான கட்டளை பிறப்பிக்கப் படுவதனால், கற்பங்கள் 108 என அறிய முடிகிறது. மூலிகைகள், இரசங்கள், உப்புகள், உபரசங்கள் முதலியவற்றைச் சிறந்த முறையில் மருந்துகளாக அமைத்து, அவற்றை உடல் அழியாமல் இருத்தற் பொருட்டு உபயோகித்தார்கள். அவ்வாறு உபயோகித்த மருந்துகளையே 'கற்பம்' என்பர்.

**கற்பம் உண்ணும் காலம்:**

கற்பம் எப்பொழுது வேண்டுமானாலும், எப்படி வேண்டு மானாலும் உண்ணக் கூடியதாக இல்லை. காலத்திற்கு ஏற்றவாறு உண்ணுகின்ற முறையில் வேறுபாடு வேண்டும் என்று தெரிவிக்கப் படுகிறது.

அதாவது, **"ஆனி, ஆவணி மாதங்களில் வெல்லத்திலும், சித்திரை, வைகாசியில் சுக்கு கசாயத்திலும், புரட்டாசி, ஆடியில் குறிசித் தேனிலும், ஐப்பசி, கார்த்திகையில் குமரிச் சோற்றிலும், மார்கழி, தை, மாசியில் கற்கண்டிலும், பங்குனியில் நெய்யிலும்"** உண்ணுமாறு உரைக்கப் பட்டுள்ளது.

இதனால், கற்ப மருந்திற்கும், இயற்கைச் சூழலுக்கும் தொடர்பு இருப்பதாகப் புலப் படுகிறது. மருந்தின் துணைப் பொருளாக உரைக்கப் பெற்ற வெல்லம், சுக்கு, குறிஞ்சித் தேன், குமரிச் சோறு, கற்கண்டு, நெய் ஆகிய பொருள்களின் குணத்திற்கும், மேற்கண்ட மாதங் களின் பெரும்பொழுது குணத்திற்கும் ஓர் ஒற்றுமை உள்ளதை உணரலாம்.

"நானுண்ட படி சொன்னேன் நீயும் உண்ணு"

என்று, தாம் உண்ட முறையைப் பிறர்க்கும் உரைக்கின்ற பாங்கு சிறப்பிற்குரியதாகும்.

**கடுக்காய் கற்பம்:**

கடுக்காயைத் தேர்ந்தெடுத்து உடைத்து, அமுரியில் ஊறவைத்து மறுநாள் வெய்யலில் காயவைக்க வேண்டும். இவ்வாறு பத்து முறை செய்ய கடுக்காய் சுத்தியாகும். சுத்தி செய்த கடுக்காய் செங்கடுக்காய் ஆகும்.



**பத்திய முறைகள்:**

காலை வல்லாரை, மதியம் அமுது, மாலையில் கடுக்காய்த்தூள் வெருகடி அளவு உண்ணவும். சிறுபயறு, சர்க்கரை, பழம், நல்ல காய்கறிகள் உண்டுவர காய சித்தியாகும். 265 கற்பம் உண்போர் ஒரு வேளை உணவே உட்கொள்ள வேண்டும். பச்சரிசியும் சிறு பயறும் சேர்த்து சமைத்த சோறும், சர்க்கரை, தேன், முக்கனி, பால் இவற்றுடன் ஒரு போதே உண்ண வேண்டும்.

'ஒரு வேளை உண்பவன் யோகி' என உரைப்பதும் நோக்கத் தக்கது. ஒரு படி அமுதுடன் துவரம் பருப்பும் சேர்த்து சோறு பொங்கி, அத்துடன் தேங்காய்ப்பூ, சர்க்கரை, நெய்யுங் கூட்டி உண்ணவும். அதன்பின் கற்பம் உண்ணவும். அப்படி உண்டால் உடல் உறுதியாகும்.

இவ்வாறு பல்வேறு முறைகளில் கற்பங்கள் உரைக்கப்படு கின்றன. ஒரு வேளை உணவும், உணவுக்குப் பின் கற்ப மருந்து என்பதும் எல்லா முறைகளிலும் ஒன்றாகவே காணப்படுகின்றன.

"பானென்ற பச்சையுப்பை தின்றா னானால்
பட்டுதா கண்ரெண்டும் பரிந்து காணே"
"வாய்பட்ட கொழுப்பாலே (பச்சை) யுப்பைத் தின்றால்
வாய்த்திருந்த சித்தியது மண்ணாய்ப் போமே"

- தொடரும்

# புலம்பெயரும் தொழிலாளர்கள்



வெளி மாநிலத் தொழிலாளர்களுக்கு எதிராக நடந்த வன்முறைகள் புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பான விவாதங்களை எழுப்பின. அந்தப் பிரச்சினை தற்போது சற்றே ஓய்ந்திருந்தாலும், இது தொடர்பாகப் பேச வேண்டிய விஷயங்கள் இன்னும் இருக்கின்றன.

குஜராத்தின் உற்பத்தியில் அண்டை மாநிலத் தொழிலாளர்களின் பங்கு கணிசமானது. குஜராத்தின் கட்டுமானத்திலும் கனரகத் தொழிற்சாலைகளிலும் ஜவுளி ஆலைகளிலும் வைரப் பட்டறைகளிலும் அயல் மாநில வியர்வை படிந்திருக்கிறது. இந்தத் தொழிலாளர்கள் இந்தி பேசுபவர்கள். மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், பிஹார், ராஜஸ்தான் முதலான மாநிலங்களிலிருந்து பிழைப்புத் தேடி வந்தவர்கள்.

குஜராத் முதலாளிகள் அயல் மாநிலத் தொழிலாளர்களை விரும்புகின்றனர். அவர்களுக்கு ஊதியத்தைக் குறைத்துக் கொடுக்கலாம். கிடைத்த இடங்களில் தங்கிக்கொள்வார்கள். மருத்துவம், சுகாதாரம், பிள்ளைகளின் கல்வி என்று எந்தக் கோரிக்கையும் அவர்களுக்கில்லை. இவர்களால் தங்கள் வேலைவாய்ப்பு பறிபோவதாகக் குஜராத்திகள் கருதினர். அப்போதுதான் இந்தப் பாலியல் குற்றம் நிகழ்ந்தது. அது பற்றிக்கொண்டது.

பிழைப்புக்காக அயல் மாநிலங்களுக்குப் புலம்பெயர்வது இந்தியாவில் நீண்டகாலமாக நடந்து வருவதுதான். நான் எண்பதுகளில் எர்ணாகுளத்தில் வேலைபார்த்தேன். அப்போது கட்டுமானத் துறையில் திறன் குறைந்த பணிகளைத் தமிழர்கள் செய்துவந்தனர். பலரும் தேனி, உசிலம்பட்டி பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு முறையான ஊதியம் கிடைத்தது. அங்குள்ள தொழிற்சங்கங்கள் அதை உறுதிசெய்தன. ஆனால், அவர்களது வாழ்நிலை அத்தனை திருப்திகரமாக இருந்ததாகச் சொல்ல முடியாது. அவர்கள் வாத்துருத்தி என்கிற பகுதியில் செறிவாக வசித்தனர். மறைதட்டிகளாலும் சாக்குப் படுதாக்களாலும் உருவாக்கப்பட்ட, ஒற்றை அறைக் குடியிருப்புகளில் ஒதுங்கிக் கொள்வார்கள். சுகாதாரக் குறைவைப் பொருட்படுத்த மாட்டார்கள். பிள்ளைகளை ஊரிலேயே விட்டுவிடுவார்கள்.

இரண்டாண்டுகளுக்கு முன்னால் நண்பர்களைச் சந்திக்க எர்ணாகுளம் போயிருந்தேன். இப்போது தமிழர்களின் இடத்தில் வட இந்தியத் தொழிலாளர்கள் இருந்தனர். ஊர் திரும்பியபோது கண்ட காட்சியை மறக்க முடியாது. அது தீபாவளி நேரம். நான் எனது ரயிலுக்காகக் காத்திருந்தேன். எனது ரயிலுக்கு முன்பாக விசாகப்பட்டினம், புவனேஸ்வரம், கொல்கத்தா வழியாக கௌகாத்தி செல்லும் விரைவு ரயில் வந்தது. முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளில் பயணிகள் நெருக்கியடித்து ஏறினார்கள். படிகளிலும் ஜன்னல்களிலும்

தொற்றிக்கொண்டார்கள். இவர்கள் ஒடிஷா, வங்கம், பிஹார், அசாம் முதலான மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள். இந்தத் தொழிலாளர்கள் ஊர் போய்ச் சேர இரண்டு நாட்கள் ஆகும்!

வழியனுப்ப வந்த நண்பர்களிடம், “எர்ணாகுளத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எத்தனை பேர் இருப்பார்கள்?” என்று கேட்டேன். அவர்களுக்குத் தெரியவில்லை. அதற்காக அவர்களைக் குறைசொல்லிவிட முடியாது. இப்படியொரு கேள்வி கடந்த மாதம் குஜராத்தில் சமூக ஆர்வலர்களால் எழுப்பப்பட்டது.

*2014*-ல் தமிழகத்திலும் இப்படி ஒரு கேள்வி எழுந்தது. அப்போது மவுலிவாக்கம் கட்டிட விபத்தில் *61* தொழிலாளர்கள் பலியாகியிருந்தனர். பலரும் ஆந்திரத்தைச் சேர்ந்தவர்கள். புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் குறித்து யாரிடத்திலும் முறையான கணக்கில்லை.

உலகின் தொழிற்சாலை என்றழைக்கப்படும் சீனாவில், நகரங்கள்தோறும் தொழிற்சாலைகள் இயங்குகின்றன. இவற்றில் பணிபுரிபவர்களில் பெரும்பாலானோர் அயல் மாகாணங்களிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள். சீனக் குடிமக்களுக்கு அவர்களது ஊராட்சிகள் ‘ஹுக்கு’ எனப்படும் குடியுரிமை அட்டையை வழங்குகின்றன. இவை அந்தந்த ஊரில்தான் செல்லுபடியாகும். அரசு வழங்கும் கல்வி, மருத்துவம், வீட்டு வசதி முதலானவற்றைப் பெற ஹுக்கு அவசியம். ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் வேலை நிமித்தம் நகரங்களுக்குப் புலம்பெயர்வார்கள். அவர்களுக்கு மட்டும் நகரங்களில் பணிபுரிய அனுமதி கிடைக்கும்,

ஆனால் நகர ஹுக்கு கிடைக்காது. பிள்ளைகள் தாத்தா - பாட்டியுடன் கிராமங்களிலேயே இருப்பார்கள். புலம்பெயர்ந்த கணவனும் மனைவியும் வெவ்வேறு தொழிற் சாலைகளில் பணியாற்றக்கூடும். அவர்கள் தொழிற்சாலையின் துயிற்கூடத்தில் (டார்மிட்டரி) தங்கிக் கொள்வார்கள். ஆண்டுக்கு ஒருமுறை பிப்ரவரி மாதம் வரும் சீனப் புத்தாண்டின்போது எல்லாத் தொழிற்சாலைகளையும் ஒரு மாதம் மூடிவிடுவார்கள். அப்போது எல்லோரும் தத்தமது கிராமங்களை நோக்கிப் பயணமாவார்கள். நீரில், சாலையில், ரயிலில் எங்கும் பயணமயமாக இருக்கும். அதற்கேற்பக் கூடுதல் வாகனங்கள் இயங்கும்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகள் பெற்றோரைப் பிரிந்து வளர்வது சீனாவில் பல சமூகச் சிக்கல்களை உண்டாக்குகின்றன. என்றாலும், அவர்களுக்கு நகர ஹுக்கு வழங்க நகராட்சிகள் தயங்குகின்றன. கூடுதல் குடும்பங்களுக்கான உள்கட்டமைப்பையும், வீட்டு வசதி, மருத்துவமனை, கல்விச்சாலைகள் போன்ற வற்றையும் ஏற்படுத்திவிட்டு, அதற்கேற்ப ஹுக்கு வழங்குவோம் என்கின்றன. அதற்கான இலக்குகளை நிர்ணயித்துக்கொண்டு முன்னேறவும் செய்கின்றன.

இந்தியாவின் நிலைமை இதற்கு நேர்மாறானது. இந்தியாவில் யாரும் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். வேலை தேடிக்கொள்ளலாம். நடைபாதைகளில் தங்கிக்கொள்ளலாம். புலம் பெயர்ந்த ஊரில் அவமானங்களையும், சமயத்தில் அடி உதையையும் சகித்துக்கொள்ள வேண்டும். அதுவும் நாள்பட நாள்படப் பழகிவிடக்கூடும்.

இந்நிலை மாற வேண்டும். இந்தியாவின் மனித வளம் மேம்படுத்தப்பட வேண்டும். எல்லோருக்கும் பள்ளிக் கல்வி வழங்க வேண்டும். அது தொழிலாளர்கள் தம் தொழில்சார்ந்த நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ள உதவும். நிறுவனங்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் ஊதியத்தில் கைவைக்க அரசு அனுமதிக்கலாகாது. இது உள்ளூர் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை உறுதிசெய்யும். தேவையற்ற காழ்ப்புணர்வும் தவிர்க்கப்படும்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் அடிப்படை வசதிகளைத் தொழில் நிறுவனங்களும் அரசும் உறுதிசெய்ய வேண்டும். அவர்கள் தத்தமது ஊருக்குச் செல்லும்போது நெரிசலற்ற பயணம் சாத்தியமாக வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் தொழிலாளர்களைக் குறித்த முறையான கணக்கு அரசிடம் இருக்க வேண்டும். இவையெல்லாம் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் கண்ணியமான வாழ்வுக்கு வகைசெய்யும். அவர்கள் உற்சாகமாகப் பணியாற்ற உதவும். தேசத்தின் உற்பத்தியும் பெருகும்!


- K. ரமேஷ்குமார்

- கவிஞர் **நிவேதிதா**

# எது கெடும்?

*பாராத பயிரும் கெடும்*
*பாசத்தினால் பிள்ளை கெடும்*
*கேளாத கடனும் கெடும்*
*கேட்கும்போது உறவு கெடும்*
*தடாத செல்வம் கெடும்*
*தெகிட்டினால் விருந்து கெடும்*
*ஓதாத கல்வி கெடும்*
*ஒழுக்கமில்லாத வாழ்வு கெடும்*
*சேராத உறவும் கெடும்*
*சிற்றின்பன் பெயரும் கெடும்*
*நாடாத நட்பும் கெடும்*
*நயமில்லா சொல்லும் கெடும்*
*கண்டிக்காத பிள்ளை கெடும்*
*கடன்பட்டால் வாழ்வு கெடும்*
*பிரிவால் இன்பம் கெடும்*
*பணத்தால் அமைதி கெடும்*
*சினமிகுந்தால் அறமும் கெடும்*
*சிந்திக்காத செயலும் கெடும்*
*சோம்பினால் வளர்ச்சி கெடும்*
*சுயமில்லா வேலை கெடும்*
*மோகித்தால் முறைமை கெடும்*
*முறையற்ற உறவும் கெடும்*
*அச்சத்தால் வீரம் கெடும்*
*அறியாமையால் முடிவு கெடும்*
*உழுவாத நிலமும் கெடும்*
*உழைக்காத உடலும் கெடும்*
*இறைக்காத கிணறும் கெடும்*
*இயற்கையழிக்கும் நாடும் கெடும்*
*இல்லாலில்லா வம்சம் கெடும்*
*இரக்கமில்லா மனிதம் கெடும்*
*தோகையினால் துறவு கெடும்*
*துணையில்லா வாழ்வு கெடும்*
*ஓய்வில்லா முதுமை கெடும்*
*ஒழுக்கமில்லா பெண்டிர் கெடும்*
*அளவில்லா ஆசை கெடும்*
*அச்சப்படும் கோழை கெடும்*
*இலக்கில்லா பயணம் கெடும்*
*இச்சையினால் உள்ளம் கெடும்*
*உண்மையில்லா காதல் கெடும்*
*உணர்வில்லாத இனமும் கெடும்*
*செல்வம்போனால் சிறப்பு கெடும்*
*சொல்பிறழ்ந்தால் பெயரும் கெடும்*
*தூண்டாத திரியும் கெடும்*
*தூற்றிப்பேசும் உரையும் கெடும்*
*காய்க்காத மரமும் கெடும்*
*காடழிந்தால் மழையும் கெடும்*
*குறிபிறழ்ந்தால் வேட்டை கெடும்*
*குற்றம்பார்த்தால் சுற்றம் கெடும்*
*வசிக்காத வீடும் கெடும்*
*வறுமைவந்தால் எல்லாம் கெடும்*
*குளிக்காத மேனி கெடும்*
*குளிர்ந்துபோனால் உணவு கெடும்*
*பொய்யான அழகும் கெடும்*
*பொய்யுரைத்தால் புகழும் கெடும்*
*துடிப்பில்லா இளமை கெடும்*
*துவண்டிட்டால் வெற்றி கெடும்*
*தூங்காத இரவு கெடும்*
*தூங்கினால் பகலும் கெடும்*
*கவனமில்லா செயலும் கெடும்*
*கருத்தில்லா எழுத்தும் கெடும்*

*கெடாமல் பாதுகாக்க வேண்டியது*
*அவரவர் பொறுப்பு*



# நதிகள் இணைப்பால் நன்மையா, தீமையா?

நதிகள் இணைப்புத் திட்டம் தொடர்பாகப் பலரும் பேசிவரும் நிலையில், தேசிய நதிகள் இணைப்புத் திட்டம் (என்ஆர்எல்பி), ஆறுகளில் நீரோட்டத்தைக் குறைப்பதுடன் வண்டல்மண் படிவதையும் வெகுவாகக் குறைத்துவிடும் என்று எச்சரிக்கிறது கொலராடோ பல்கலைக்கழக ஆய்வு. இத்திட்டத்தால் கரும்பு, நெல், கோதுமை, மஞ்சள், புகையிலை உள்ளிட்ட பயிர்கள் விளையும் வளமான படுகைகள் பாதிக்கப்படுவதுடன் கடலோரங்களில் கரை அரிப்புகள் அதிகரித்துவிடும் என்றும் இந்த ஆய்வு கூறுகிறது. இதனால் நதிநீர்ப் படுகைகளில் வசிக்கும் 16 கோடி மக்களின் வாழ்க்கை நேரடியாகப் பாதிக்கப்படும்.


நதிகளை இணைப்பதற்காகவும் புதிய பகுதிகளுக்குப் பாசன நீரைக் கொண்டு செல்வதற்காகவும் ஏராளமான வாய்க்கால்களுக்கு இந்தத் திட்டம் வழி வகுக்கிறது. அது மட்டுமின்றி புதிய அணைகளும் நீர்த்தேக்கங்களும் கட்டடப்படவுள்ளன.

மிகப் பெரிய 29 வாய்க்கால்கள் 9,600 கி.மீ. நீளத்துக்கு வெட்டப்படவுள்ளன. இவற்றில் 245 லட்சம் கோடி லிட்டர் தண்ணீர் பாயும். இந்தத் திட்டத்தை அமல் செய்யும் ‘தேசிய தண்ணீர் வள முகமை’யிடம் பெற்ற தரவுகளின் அடிப்படையில், இந்த அளவு கணக்கிடப்பட்டுள்ளது. அத்துடன் வெவ்வேறு அமைப்புகளிடமிருந்து 500 ஆவணங்கள் பெறப்பட்டுப் பரிசீலிக்கப்பட்டன. இந்தத் திட்டம் முழுமையான பிறகு மொத்தமுள்ள 29 ஆறுகளில் 23 ஆறுகளில் நீரோட்டம் கணிசமாகக் குறைந்துவிடும்.

கங்கை நதியில் 24% நீரோட்டம் குறையும். அதன் துணையாறுகளான கண்டக் (-68%), காகடா (-55%) மிகவும் பாதிக்கப்படும். பிரம்மபுத்திரா நதியில் 6% நீரோட்டம் குறையும். அதன் துணை ஆறுகள் மானஸ் (-73%), சங்கோஷ் (-72%), ரைதக் (-53%) மிகவும் பாதிக்கப்படும். அணைகளிலும் தடுப்பணைகளிலும் வண்டல் தடுக்கப்படுவதால் படுகைக்கு வண்டல் வருவது வெகுவாகக் குறைந்துவிடும்.

கங்கை-பிரம்மபுத்திரா டெல்டாவில் மட்டும் வண்டல் படிவது 30% - அதாவது ஆண்டுக்கு 2.5 மில்லி மீட்டர் சராசரியாகக் குறைந்துவிடும். இதனால் கழிமுகங்களுக்குச் செல்லும் மணல் குறைந்து கடலோரத்தில் அரிப்பு அதிகமாகும். கடல் நீர்மட்ட உயரம் அதிகரிக்கும். கடல்நீர் ஆண்டுதோறும் 5.6 மில்லி மீட்டர் இப்பகுதியில் உயரும் என்று கணிக்கப்படுகிறது.

இணைப்பில் சிக்கும் எல்லா ஆறுகளிலும் இந்த இழப்புகள் இருக்கும். ஏற்கெனவே இயற்கையான காரணங்களாலும் மனிதர்களின் ஆக்கிரமிப்புகளாலும் கிருஷ்ணா, கோதாவரி, மகாநதி ஆறுகள் கடலில் கலக்கும் இடங்களில் கரைகள் அரிக்கப்பட்டுவருகின்றன. ஆனால்,



இத்திட்டத்தால் காவிரியில் மட்டும் 33% நீரோட்டம் அதிகரிக்கும். காரணம் அதன் துணையாறான பெண்ணாறில் 450% அளவுக்கு நீரோட்டம் அதிகரிக்கும். வண்டல் படிவு அளவில் மாற்றம் இருக்காது.

இயற்கையான நீரோட்டங்களுக்கு மாறாக, செயற்கையாக ஆறுகளை இணைப்பதால் வளமான வேளாண்மைப் பகுதிகள் புயல்-மழைத் தாக்குதல்களுக்கும், வெள்ளப் பெருக்குக்கும், நீர்ப்பெருக்கு குறைந்த காலத்தில் உப்பு நீர் உள்ளே புகுவதற்கும் இரையாக நேரிடும். இதனால் நதிகளின் படுகைப் பகுதிகள் தவறான திசைக்குத் தள்ளப்படும் என்று ஆய்வறிக்கை எச்சரிக்கிறது.


- ஆசிரியர்

# புற்று நோயைக் குணப்படுத்தும் மெலடோனின்

நள்ளிரவு தாண்டியும் WhatsApp, Facebook இல் காலம் கழிப்பவர்களே இதை கொஞ்சம் கவனிக்கவும்.

நமது உடல் ஓர் அற்புத படைப்பு. அதில் ஆச்சரியப்படத்தக்க பல அம்சங்கள் உள்ளன. அதில் ஒன்றுதான் நமது உடலில் நேரத்தை தானாகவே ஒழுங்கு படுத்தும் உயிரியல் நேர முறைமை (Biological Clock System) இதனை வழி நடத்தும் ஒரு சுரப்பி நம் ஒவ்வொருவரின் தலையிலும் உள்ளது. அதுதான் பினியல் சுரப்பி.

இரவின் இருளில்தான் பினியல் சுரப்பி மெலடோனினை சுரக்கும். அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பார்வை நரம்பு மூலமாக அது இரவின் இருளை அறிந்து கொள்ளும். ஒவ்வொரு நாளும் இரவு 10க்குப் பிறகு இருளில் சுரக்கும். மெலடோனின், நமது இரத்த நாளங்களில் பாய்ந்தோடும். நமது கண்கள் வெளிச்சத்தில் பட்டுக் கொண்டிருந்தால் பினியல் சுரப்பி மெலடோனினை சுரக்காது. பினியல் சுரப்பி மெலடோனினை சுரக்க ஆர்மபித்து காலை 5 மணிக்கு நிறுத்தி விடும்.




கடலை உருண்டை வடிவில் இருக்கும் இந்த PINEAL GLAND பார்வை நரம்புடன் இணைக்கப் பட்டுள்ளது. இந்த பினியல் சுரப்பி ஓர் அரிய பொருளை தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சுரக்கிறது.

அதுதான் மெலடோனின் (melatonin) இந்த அதிசய அரிய பொருளின் பலன் மகத்தானது புற்று நோயைக் குணப்படுத்தும் இயற்கை மருந்து இந்தப் பொருளில் இருக்கிறது. மெலடோனின் சுரக்க வேண்டும் என்றால் ஒரே ஒரு நிபந்தனை. இரவின் இருளாக இருக்க வேண்டும்.

இரவு நீண்ட நேரம் கண் விழித்திருந்தால் நாம் புற்று நோயைக் குணப்படுத்தும் மெலடோனின் என்ற இயற்கை மருந்தை இழந்தவர்களாக இருப்போம். எனவே இரவு முற்கூட்டியே உறங்கி அதிகாலையில் எழுவது புற்று நோயைத் தடுக்கும் என்று இன்று மருத்துவ உலகம் கூறுகிறது.

அதே போன்று அதிகாலையில் காற்று வெளி மண்டலத்தில் ஓஸோன் நிறைந்திருக்கும். ஒரு மனிதன் அதிகாலையில் எழுந்து நடமாட ஆரம்பித்தால் இந்த ஓஸோன் காற்றை அவன் சுவாசிப்பான். இது நமது

உடலிலுள்ள நோய்களைக் குணப்படுத்தி, நம் ஆயுளை அதிகரிக்கும் என்று மருத்துவ விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இரவு முன்கூட்டியே உறங்குவதால் மெலடோனின் கிடைக்கிறது. அதிகாலையில் எழுந்து அலுவல்களைத் துவங்குவதால் ஓஸோன் கிடைக்கிறது நமது உடலின் ஆரோக்கியம் அனைத்தும் இவற்றில் அடங்கியிருக்கிறது. அதிகாலையின் சில மணி நேரங்கள் அந்த நாளின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்கக் கூடியவையாக இருக்கின்றன.

அதிகாலையில் எழும்போது நமது மூளையும், இன்னபிற உறுப்புகளும் பூரண ஓய்வு பெற்று வேலை செய்ய தயாராக இருக்கும். அந்த நேரத்தில் செய்யும் பணிகள் அனைத்தும் திறமை மிக்கதாகவும், ஆற்றல் அழுத்தம் மிக்கதாகவும் திகழும். எனவே முன் எழுந்து முன் மறையும் அதிசய மெலடோனினைப் பெறவும், அதிகாலைப் பொழுதின் ஓஸோனைப் பெற்று பயனடைவோம்.

- V. சிவசங்கரன்

# ஸ்லோ பாய்ஸன்

கடந்த 10 ஆண்டுகளில் இட்லி, தோசை மாவை விலைக்கு விற்கும் பழக்கம் விரிவடைந்துக் கொண்டே போகிறது. இட்லி, தோசை மாவு விற்கப்படுவதால் ஒரு புறம் பெண்களின் வேலைச் சுமை குறைகிறது. மறுபுறம் வீட்டில் இருந்தபடியே பணம் ஈட்டும் தொழிலாக மாவு விற்பனை நடைபெறுகிறது. மேலும் சிறிய மளிகைக்கடை முதல் பெரிய ஷாப்பிங் மால் வரை இட்லி, தோசை மாவு பாக்கெட்டுகளில் கிடைக்கிறது.

இந்த மாவு ஒரு உயிர்கொல்லி ஸ்லோ பாய்ஸன் என்பது ஏனோ பலருக்கும் தெரிவதில்லை. இதன் பின் விளைவுகளை சற்று அலசிப் பார்த்தால் நம் உதிரமும் உறைந்து போகும் அளவிற்கு அதிபயங்கரமான விளைவுகள் தெரிய வருகின்றது. நீங்கள் வாங்கும் எந்த ஒரு ஈர பத தோசை மாவிற்கும் ISI சான்றிதல் கிடையாது. எனவே, இது எந்த ஒரு ஆராய்ச்சி கூடத்திலும் பரிசோதனை செய்த பின் விற்பனைக்கு வருவதில்லை.

நாம் நம் வீட்டில் அரைத்த மாவை இரண்டு நாள் வைத்து மூன்றாவது நாள் முகர்ந்து பார்த்தால் புளிப்பு வாசைனை வரும் தோசையும் புளிக்கும். ஏன் என்றால்? மாவு பக்குவமாவதும் தயிர் உறைவதும் ஒரு நல்ல பேக்டீரியாவின் செயலாகும். இதை தவிர்ப்பதற்காகத் தான் கடையில் வாங்கும் மாவுக்கு 6 நாள் கியாரன்டியும் தந்து ஒரு வாசனையும் வராமல் இருக்க, நம் உடலில் ஏற்படும் காயத்திற்கும், புண்ணிற்கும், கேரம் போர்ட் விளையாட பயன்படுத்தும் Boric Acid, ஆரோட் மாவு போன்றவற்றைக் கலந்து விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றனர்.

முக்கியமாக இந்த கிரைண்டர்கள் கமர்ஷியல் ரகம் இல்லை. அதாவது ஒரு நாளைக்கு 3-6 மணி நேரம் அரைக்க வேண்டிய இவைகள் 12-18 மணி நேரம் தொடர்ந்து ஓட்டுவதால் அந்த கல் கொஞ்சம் கொஞ்சமாக தேய்மானம் ஏற்பட்டு மாவுடன் கலந்து விடுகின்றது. இந்த சிறு கருங்கற்களின் துகள்களால் தான் சமீப காலமாக நிறைய பேருக்கு சிறு நீரகத்தில் கல் உண்டாகின்றது.ஒரு நல்ல கல்லின் ஆயுள் 12 மணி நேரம் அரைத்தால் வெறும் 6 மாதம் தான். அதையேக் கொத்தி போட்டாலும் அடுத்த மூன்று மாதங்கள் வரை தான் அதனைப் பயன்படுத்த முடியும்.

சமையல் செய்யும் ஆட்கள் கைகளை அடிக்கடி அலம்ப வேண்டும். நகங்கள் வளர்க்கவே கூடாது. ஆனால் இது போன்ற சுத்தத்தை இவர்கள் பேணுவதில்ல. ஒவ்வொரு நகத்தின் இடுக்கிலும் உள்ளகிருமிகள்இந்தமாவில்கெட்டபேக்டிரியாக்கள் மற்றும், கிருமிகளை உருவாக்கி நம் உடலின் எதிர்ப்பு சக்தியைக் வெகுவாகக் குறைத்து வாந்தி, பேதி போன்ற நோய்கள் வரக் காரணமாகின்றது.

எனவே தாம்,சிறு குடும்பங்கள் கடை மாவை வங்கிப் பயன்படுத்தி வருகின்றனர். மாறாக விற்பனைக்காக உற்பத்தி செய்பவர்கள் கிரைண்டரை ஒவ்வொரு மாவு முடிந்ததும் கழுவுவதில்லை.

எனவே அதில் கிருமி அதிகரித்து கொண்டேச் செல்கிறது. இவர்கள் கமர்ஷியலாக பயன்படுத்த ஒவ்வொரு முறையும் வெந்நீர் உற்றி தான் சுத்தம் செய்ய வேண்டும் ஆனால் அவ்வாறு செய்வதில்லை. வாரத்திற்கு ஒரு முறை கழுவினாலே அதிகம். எலிகள் மற்றும் பூச்சிகள் அந்த மீத மாவை ருசித்து அந்த மிஷினின் சுத்ததன்மை போக்கி விடுகின்றது.

என்னதான் நல்ல அரிசி உளுந்து போட்டாலும் நல்ல தண்ணீரை ஊற்றி தான் மாவு அரைக்க வேண்டும். இவர்கள். பயன்படுத்துவதோ உவர்தன்மையைக் கொண்ட கிணத்தடி தண்ணீர் மற்றும் உப்புதண்ணிர். எனவே உப்பு போட வேண்டிய வேலையும் இவர்களுக்கில்லை.

நம் முன்னோர்கள் இட்லிக்கு மாவு அரைக்கும்போது ஒரு கை வெந்தயத்தை போட்டு அரைப்பார்கள். வெந்தயம் ஒரு இயற்கையான நோய் நிவாரணி (ஆண்டி பயாடிக்) இது, உடம்பு உஷ்னம், வாய் நாற்றம், குடல் புண் (அல்சர்) போன்ற நோய்களைத் தடுக்கும் ஆற்றல் உள்ளது. கடை மாவில் யாரும் வெந்தயத்தை சேர்ப்பதில்லை.

நமக்கு நன்கு தெரிந்த கலப்படம் செய்யாத நேர்மையானவர்கள் அரைத்து விற்பனை செய்யும் இட்லி, தோசைமாவுகளை மட்டும் வாங்குவதோடு, முன் பின் தெரியாதவர்கள் தயாரித்து கடைகளில் விற்கும் மாவுகளை முற்றிலுமாகத் தவிர்ப்பது நலம்.

- ஆசிரியர்

# புயலுக்குப் பின் செய்வது என்ன ?

புயல், கனமழை மற்றும் வெள்ளம் அடித்து வரும் வீட்டுக்கழிவுகள், சாலைக் கழிவுகள், மனிதக் கழிவுகள், விலங்குக் கழிவுகள், பெட்ரோல், டீசல் போன்ற எண்ணெய்க் கழிவுகள், பலதரப்பட்ட தொழிற்சாலைக் கழிவுகள், வேதிக்கழிவுகள், விவசாயத் தோட்டக் கழிவுகள், இறந்த மனித / விலங்கு உடல்சிதைவுகள் என எல்லாமும் கலந்த தண்ணீர் தெருக்களில் தேங்கும்போது, ஆபத்து தருகின்ற பாக்டீரியா, வைரஸ், ஒட்டுண்ணிக் கிருமிகள் கோடிக்கணக்கில் வளர்ந்துவிடுகின்றன. இப்படி அசுத்தமான மழைநீரும் வீட்டுக் குழாய்களில் வரும் குடிநீரும் ஒருசேரக் கலந்துவிடுமானால், குடிதண்ணீர் மாசடைந்து, வாந்தி, வயிற்றுப்போக்கு, காலரா, டைபாய்டு, மஞ்சள் காமாலை, சீதபேதி போன்ற நோய்கள் வரிசைகட்டி வருகின்றன.

தேங்கும் மழைநீரில் மக்கள் வெறுங்காலில் நடக்கும்போது எலிக் காய்ச்சல், சேற்றுப்புண், சரும அரிப்பு, சரும வெடிப்பு போன்ற தொல்லைகளும் கைகோர்க்கின்றன. சரியாக வடியாத மழைநீரில் ஈக்கள், பூச்சிகள், வண்டுகள், கொசுக்கள் என எல்லாமே கூடாரம் அமைத்துத் தொற்றுநோய்களைப் பரப்புகின்றன. புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நோய்க் கூட்டத்திலிருந்து தப்பிப்பதுதான் இப்போதைய சவால்.

புயல், வெள்ளப் பாதிப்புக்குப் பிறகு வீட்டுக்குழாய்களில் வரும் குடிநீர் பல வண்ணங்களில் வரலாம். குளத்து நீரைக் குடிக்க வேண்டியது வரலாம். முதலில் அதைச் சுத்தப்படுத்த வேண்டியது மிக முக்கியம். நாம் குடிக்கப் பயன்படுத்தும் எந்த ஒரு தண்ணீரையும் சுத்தமான பருத்தித் துணியில் வடிகட்டி, குறைந்தது 10 நிமிடங்களுக்குக் கொதிக்க வைத்து, ஆற வைத்துக் குடிப்பதுதான் ஆரோக்கியத்துக்குப் பாதுகாப்பு தரும்.

குடிநீரைத் தேக்கும் கீழ்நிலைத்தொட்டிகளையும் மேல்நிலைத்தொட்டிகளையும் உடனடியாகக் கழுவிச் சுத்தப்படுத்தி, இரண்டு நாட்களுக்கு உலர வைக்க வேண்டும். அதன் பின்னர் பிளீச்சிங் பவுடரைத் தெளித்துவிட்டு, தண்ணீரை இறக்கிப் பயன்படுத்த வேண்டும். இந்தப் பயன்பாட்டில் முக்கியமானது பிளீச்சிங் பவுடரின் அளவு. இரண்டரை கிராம் பிளீச்சிங் பவுடர் ஆயிரம் லிட்டர் தண்ணீரைச் சுத்தமாக்கும். தண்ணீர்த்தொட்டி கொள்ளளவைப் பொறுத்து ஒரு வாளித் தண்ணீரில் 100 கிராம் பிளீச்சிங் பவுடரைக் கலந்து பசைபோல் செய்துகொண்டு அதன் பின்னர் 4 மடங்குத் தண்ணீரைக் கலந்து நன்றாக கலக்க வேண்டும். 10 நிமிடங்கள் கழித்து வாளியில் கலந்த குளோரின் தண்ணீரை தொட்டித் தண்ணீரில் கலக்க வேண்டும்.

வேலை முடிந்து வீட்டுக்குள் நுழைந்ததும் சுடுநீரில் கை கால்களைக் கழுவ வேண்டியது முக்கியம். வெது வெதுப்பான நீரில் குளிக்க வேண்டும். முகம், கை, கால்களை சோப்புப் போட்டு நன்றாகக் கழுவி எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். காலில் செருப்பு அணிந்துதான் வெளியில் செல்ல வேண்டும். தேங்கிக் கிடக்கும் தண்ணீரில் குழந்தைகளை விளையாடவிடக்கூடாது.

தண்ணீரைச் சேமிக்கும் பாத்திரங்களையும் குடிநீர்ப் பாத்திரங்களையும் சமைத்த உணவுகளையும் ஈக்கள்/ கொசுக்கள் மொய்க்காமல் மூடிப் பாதுகாக்க வேண்டும். மின்தடையால் குளிர்சாதனப்பெட்டிகளில் பாதுகாக்கப்படும் உணவுகளில் பூஞ்சைகள் வளர்ந்துவிடலாம். இதனால் அந்த உணவுகள் கெட்டுவிடலாம். எனவே சில மாதங்களுக்குக் குளிர்சாதனப்பெட்டிகளில் உணவுகளைப் பாதுகாத்துச் சாப்பிடுவதைத் தவிர்ப்பதும், உடனுக்குடன் சமைத்த உணவுகளைச் சாப்பிடுவதும் நல்லது.

புயல் வீசும் காலத்தில் கிராமங்களில் மக்கள் தங்கும்வீடுகளுக்குள்ஆடு, மாடு, கோழி, கன்று என தங்கள் கால்நடைகளையும் தங்கவைப்பார்கள். கனமழை நீடித்தால் வீட்டுச் சுவர்களில் ஈரம் கசிந்து பச்சை வண்ணத்தில் பூஞ்சைக் கிருமிகள் வளர்ந்துவிடும். இந்தச் சூழல்கள் வீட்டில் உள்ளவர்களுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தி, ஆஸ்துமாவை வரவழைக்கும். இதைத் தவிர்க்க சுவர்களை பிளீச்சிங் பவுடர் கொண்டு சுத்தப்படுத்தி, வெண் சுண்ணாம்பு அடித்துவிட்டால் பூஞ்சைகள் அழிந்துவிடும். ஆஸ்துமா வராது. வீடிழந்த மக்கள் முகாம்களில் தங்கவைக்கப்படுவதுபோல் பிராணிகளுக்கும் தகுந்த பாதுகாப்பு தரவேண்டும்.

கனமழை காரணமாக தெருக்களில் தண்ணீர் தேங்குவதால் கொசுக்களின் ஆதிக்கம் பெருகுகிறது. அப்போது மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றுக்கு சுயமருத்துவம் கூடாது. ஆரம்பத்திலேயே தகுதியான மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும். புயல் பாதிப்பால் ஏற்படும் டைபாய்டு காய்ச்சல், ஃப்ளூ காய்ச்சல், மஞ்சள் காமாலை, நிமோனியா போன்றவற்றைத் தடுக்கத் தடுப்பூசிகள் போட்டுக்கொள்வது நல்லது. குழந்தைகளுக்கு ஏற்படுகிற ரோட்டா வைரஸ் வயிற்றுப்போக்கைத் தடுக்கத் தடுப்புச் சொட்டு மருந்து எடுத்துக்கொள்ளலாம்.

முதலில் பாதுகாப்பான குடிநீருக்கும் உணவுக்கும் அரசு உறுதி தர வேண்டும். பரவலாக மருத்துவ முகாம்களை நடத்தி, அங்கு பரவும் நோய்கள் தொடர்பாக மக்களுக்கு விழிப்பு ணர்வை ஏற்படுத்தி, அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளை இப்போதே மேற்கொள்ள வேண்டும். புயலால் உருக்குலைந்துபோன சாலைகளில் போக்குவரத்துத் தடைகள் இருக்கும். இதன் காரணமாக மருத்துவ உதவிகள் பெருநகரங்களிலிருந்து கிராமங்களுக்கு வந்து சேருவது தடைபடும். இந்தக் குறையைத் தவிர்க்க அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகளை உள்ளூரிலேயே வாங்குவதற்கு அனுமதி வழங்குதல், தனியார் மருத்துவர்கள் மற்றும் தன்னார்வலர்களின் உதவியைப் பெறுதல் போன்ற வழிமுறை களையும் பின்பற்ற வேண்டும். உள்ளாட்சி இயந்திரங்கள் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தெருச்சுத்தம், கழிவுநீர் அகற்றுதல், கொசு ஒழிப்பு போன்ற சூழல் சுத்தம் காக்கும் பணிகளில் உடனடியாக இறங்க வேண்டும்.

**- ஆ. மவுரியன்**


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Cell : 93821 33334, 044 - 4861 5321

# நீங்க பயன்படுத்தும்

தினமும் இரண்டு முறை ஒரு நாளைக்கு இரண்டு முறை பல் துலக்க வேண்டும் என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள். அது ஆரோக்கியமான விஷயம் தான். ஆனால் நாம் பயன்படுத்தும் டூத் பேஸ்ட் ஆரோக்கியமானதா என்பது தான் கேள்வி. எப்படிப்பட்ட பேஸ்ட் கொண்டு துலக்குகிறோம் என்பது தான் முக்கியம். அவை நம்முடைய உயிருக்கே கேடு விளைவிக்கக் கூடிய ஒன்றாகவே இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஆம். நாம் வாங்கும் பெரும்பாலான டூத் பேஸ்ட்டுகளில் உயிர்க்கொல்லிகள் அதிகமாகக் கலக்கப்படுகின்றன. என்ன டூத் பேஸ்ட் வாங்க வேண்டும் என்பதைவிட எதையெல்லாம் வாங்கக் கூடாது என்பதைத் தெரிந்து கொண்டாலே போதும். பாதி பிரச்னை தீர்ந்துவிடும். டூத் பேஸ்ட்டில் நிறம், மணம், சுவை ஆகியவற்றுக்காக பல்வேறு வேதிப்பொருள்கள் கலக்கப்படுகின்றன. அதனால் என்னென்ன பொருள்கள் கலந்திருந்தால் வாங்கக் கூடாது என்பதைத் தெரிந்துகொண்டு அந்த மாதிரியான டூத் பேஸ்ட்டை வாங்காமல் தவிர்த்திடுங்கள்.



புளோரைடு பொதுவாக நாம் பயன்படுத்தும் பெரும்பாலான டூத் பேஸ்ட்களில் புளோரைடு கலந்துதான் இருக்கிறது. குறிப்பாக அமெரிக்காவில் விற்கப்படும் 95 சதவீத டூத் பேஸ்ட்டுகளில் புளோரைடு மிக அதிக அளவில் கலந்திருக்கிறது. அது பற்களின் எனாமலை போக்குவதோடு பற்களின் நிறமும் நாளடைவில் மங்கச் செய்துவிடும். 41 சதவீதம் பேர் அமெரிக்காவில் இந்த எனாமல் தேய்மானப் பிரச்னையால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்கிறது ஓர் ஆய்வு. செயற்கை இனிப்புகள் டூத் பேஸ்ட் எப்போதும் வறட்சியடையாமல் இருக்கக் காரணம் அதில் சேர்க்கப்படும் சோர்பிடோல் என்னும் திரவம் தான். இது குழந்தைகளுக்கு டயேரியாவை உண்டாக்கிவிடும். டூத் பேஸ்ட்டில் சுவைக்காக பயன்படுத்தப்படுகிற சாச்சரின் என்னும் மற்றொரு செயற்கை இனிப்பு வகை சிறுநீர்ப்பையில் புற்று நோயை உண்டாக்குகிறது. அதற்கு பதிலாக ஸ்டீவியா அல்லது எக்ஸ்லிடோல் என்னும் இயற்கை இனிப்பு வகை அடங்கிய டூத் பேஸ்ட் பயன்படுத்துவது நல்லது.

செயற்கை நிறமிகள் டூத் பேஸ்ட்டில் பயன் படுத்தப்படுகிற சிந்தடிக் கலர்கள் பெரும்பாலும் நிலக்கரி தாரிலிருந்து பிரித்தெடுக்கப்படுகின்றன. ஏழு நிறங்கள் மட்டுமே டூத் பேஸ்ட்டில் பயன்படுத்த அங்கீகரிக்கப்பட்டவை. மற்ற நிறங்களுக்கு தடையுண்டு. குறிப்பாக, மஞ்சள் நிற டூத் பேஸ்ட்டுகள் ஒற்றை தலைவலி, ரத்த அழுத்தம், கேன்சர் ஆகியவற்றை உண்டாக்கும் வாய்ப்புகள் மிக அதிகம். அதனால் உங்க டூத் பேஸ்ட் இந்த மாதிரி இருந்தா மொதல்ல அத தூக்கி வீசுங்க. சோடியம் லாரில் சல்பேட் சோடியம் லாரில் சல்பேட் டிடர்ஜெண்ட்டாகப் பயன்படுத்தக் கூடியது. ஆனால் அதை நம்முடைய டூத் பேஸ்ட்டில் உட்பொருளாகப் பயன்படுத்துகிறார்கள். அது உண்மையிலேயே தரையை சுத்தம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு பொருள். டூத் பேஸ்ட்டில் நுரை வருவதற்காக இந்த வேதிப்பொருள் சேர்க்கப்படுகிறது. இதனால் நாக்கில் வெள்ளை நிறத்தில் புள்ளிகள் உண்டாகும்.

கார்ஹீனன் இந்த கார்ஹீன்ன என்னும் வேதிப்பொருள் சிவப்பு கடல்பாசியின் கழிவிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. இது பொதுவாக டூத் பேஸ்ட் திக்காக மாற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த உட்பொருள் கொண்ட பேஸ்ட்டை பயன்படுத்துவதால் இரைப்பை அழற்சி, மலக்குடல் புற்றுநோய், அல்சர் ஆகியவை உண்டாகும் என்று விலங்குகள் கொண்டு பரிசோதிக்கப்பட்டு நிரூபிக்கப் பட்டுள்ளது. இது நம்முடைய உடலில் இன்சுலின் சுரப்பை தடுக்கவும் குளுக்கோஸ் பற்றாக்குறையையும் உண்டாக்குகிறது. புரோபலின் க்ளைக்கால் டூத் பேஸ்ட் உறைந்து போகாமல் இருப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிற மிக முக்கிய உட்பொருள் தான் இந்த புரோபலின் க்ளைக்கால்

ஆகும். இது பொதுவாக அழகு சாதனப் பொருள்களில் மென்மைத்தன்மை கொடுப்பதற்காகப் பயன்படுத்தப்படுவது. இந்த புரோபலின் க்ளைக்கால் சேர்க்கப்பட்ட டூத் பேஸ்ட் பயன்படுத்தப்படுவதால் மத்திய நரம்பு மண்டலம், கல்லீரல், இதயம் ஆகியவை பாதிப்புக்கு உள்ளாகும்.

ட்ரைகுளோசன் பாக்டீரியா தாக்குதலில் இருந்து தப்பிக்க இந்த ட்ரைகுளோசன் டூத் பேஸ்ட்டுகளில் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்கா சுகாதார நிறுவனம் இந்த ட்ரைகுளோசன் கலந்த சோப்பு மற்றும் பாடி வாஷ்களுக்கு தடை விதித்துள்ளது. ஆனால் நாம் பயன்படுத்தும் கோல்கேட் டூத் பேஸ்ட்டில் இன்னும் இந்த ட்ரைகுளோசன் பயன்படுத்தப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. இந்த ட்ரைகுளோசன் நம்முடைய உடலில் தைராய்டு ஹார்மோன்களைக் குறைக்கிறது. நோய் எதிர்ப்பு ஆற்றல் அதிகரிக்காமல் தடுக்கிறது. எந்த பேஸ்ட் வங்கலாம். கடையில் நிறைய காசை கொடுத்து எதையாவது வாங்கி, கூடவே நோயையும் சேர்த்து வாங்குவதை விட, வீட்டிலேயே டூத் பேஸ்ட் தயாரித்து பயன்படுத்துவது நல்லது.



பேஸ்ட்டுகளின் முனையில் பச்சை நிறத்தில் பட்டை கொடுக்கப்பட்டிருந்தால், இந்த டூத் பேஸ்ட்டில் முழுமையாக இயற்கைப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அர்த்தம்.

நீல நிறத்தில் டூத் பேஸ்ட்டின் முனையில் பட்டை தீட்டப்பட்டிருந்தால், இதில் இயற்கைப் பொருட்களுடன் சில மருந்துகளும் கலக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன என்று அர்த்தம்.

சிவப்பு நிறம் டூத் பேஸ்ட்டின் முனையில் சிவப்பு நிறத்தில் பட்டை இருப்பது, அதில் இயற்கைப் பொருட்களுடன், அதிகமான அளவில் கெமிக்கல்களும் கலக்கப்பட்டுள்ளன என்பதைக் குறிக்கிறது.

# டூத் பேஸ்ட் நல்லதா?

கிளே பேஸ்ட் அதாவது மண்ணில் நம் முன்னோர்கள் பல் துலக்கினார். அதை முட்டாள் தனம் என்று சொன்னோம். ஆனால் அதுதான் ஆரோக்கியம் நிறைந்தது என்பதை உணர தவறிவிட்டோம். அதைத்தவிர, வேப்பிலையின் குணம் நிறைந்த, வேப்பிலை எண்ணெய் உட்பொருளாகக் கொண்ட, கிராம்பு உட்பொருளாகக் கொண்ட டூத் பேஸ்ட்டுகளை வாங்கிப் பயன்படுத்துவது நம்முடைய பணத்தை சேமிப்பதற்காக மட்டுமல்ல, நம்முடைய பற்கள் மற்றும் சிறுநீரகம், கல்லீரல் போன்ற உள்ளுறுப்புகளையும் பாதுகாக்க முடியும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

நான்கு வகை வண்ண பட்டைகள் டூத் பேஸ்ட்டுகளின் முனைகளில் **பச்சை, நீலம், சிவப்பு, கருப்பு** என நான்கு வண்ணங்களில் ஏதேனும் ஒரு வண்ணப் பட்டை பயன்படுத்தப்பட்டிருக்கும். இந்த ஒவ்வொரு வண்ணமும் அதில் உள்ள உட்பொருட்களைக் குறிப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. நீங்க பயன்படுத்தும் டூத் பேஸ்ட் நல்லதா என்பதை பார்த்ததுமே கண்டுபிடிக்க வேண்டுமா? பச்சை நிறம் டூத்

கருப்பு நிறம் ஒருவேளை கருப்பு நிற பட்டையானது டூத் பேஸ்ட்டின் முனையில் இருப்பின், அது முழுமையாக கெமிக்கல்களை உட்பொருட்களாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்று அர்த்தம்.

டூத் பேஸ்ட்டை தயாரிக்கும் சில கம்பெனிகள், இது தவறானது என்று வாதிடுகின்றனர். மேலும் டூத் பேஸ்ட்டில் என்ன உட்பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை, டூத் பேஸ்ட்டின் பின்புறத்தில் தெளிவாக பட்டியலிட்டுள்ளதாகவும் கூறுகின்றனர். பிறகு ஏன் டூத் பேஸ்ட்டுகளில் இந்த நான்கு வண்ணங்களில் மட்டும் பட்டைகள் கொடுக்கப்பட்டுள்ளன? எனவே மக்களே! உஷாராக இருங்கள். இதில் எது சரி என்பதை சிந்தித்து, நீங்களே ஆய்வு செய்து முடிவெடுங்கள். குறிப்பு இந்த வண்ண பட்டைகள் வெறும் டூத் பேஸ்ட்டிற்கு மட்டுமின்றி, நீங்கள் பயன்படுத்தும் க்ரீம்களுக்கும் பொருந்த வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருங்கள்.

- A.C. குமார்

**ஒரு பக்க சிறுகதை**

# இன்னும் சில மனிதர்கள்

பல படுக்கைகள் கொண்ட பெரிய மருத்துவமனை. அவற்றில் ஒரு அறையில் இரு தீவிர நோயாளிகள். ஒருவரை இன்னொருவர் பார்த்தது இல்லை. இருவருக்குமிடையே ஒரு தடுப்புச் சுவர். ஒருவர் படுக்கை சன்னல் அருகில். இன்னொருவருக்கு சன்னல் கிடையாது. எப்போ தாவது வந்து செல்லும் மருத்துவச் செவிலியைத் தவிர தனிமை.. தனிமை.. தனிமை..

சன்னல் படுக்கை நோயாளிக்கு புற்றுநோய். இன்னொருவர் கடும் எலும்பு முறிவு நோயாளி. நாளடைவில் நட்பாகிவிட்டனர். ஒருமுறை எலும்பு நோயாளி சன்னல் நோயாளியிடம் சொன்னார்.

உனக்காவது பொழுது போக்க, ஒரு சன்னல் இருக்கிறது. எனக்கு அதுகூட இல்லை. கவலைப் படாதே நண்பா. நான் சன்னலூடே என்னென்ன காண்கிறேனோ, அவ்வளவையும் உன்னிடம் விவரிக்கிறேன். இதை ஒரு ஒப்பந்தமாகவே கடைப்பிடிப்பேன்.

அன்று முதல் சன்னல் நோயாளி, தான் கண்ட காட்சிகளை சுவைபட தன் நண்பனுக்குக் கூறலானார். நண்பா



சன்னலுக்கு வெளியே ஒரு பெரிய ஏரி. நடுவில் சிறு தீவு. ஏரியில் படகுகள் மிதக்கின்றன. ஏரிக்கரையில் அழகான பூங்கா. காதலர்கள் தன்னை மறந்து கதைகள் பேசுகின்றனர். எலும்பு நோயாளிக்கு அப்படியே காட்சிகள் மனக்கண்ணில் விரியும்.

சன்னல் நோயாளி இன்னொரு நாள் சொல்வார். ஏரிக்கரை ஓரமாக ஒரு சாலை. அதில் மணப்பெண் அழைப்பு ஊர்வலம்தீ போய்க்கொண்டிருக்கிறது. குழந்தைகள் மகிழ்ச்சி யுடன் ஓடித் திரிகின்றன. மணப்பெண்ணிடம் தோழி ஏதோ சொல்கிறாள். மணப்பெண் முகத்தில் அப்படி ஒரு வெட்கம். ஊர்வல அரவங்கள் எதுவும் எலும்பு நோயாளிக்கு கேட்கவில்லையாயினும் நாதசுரமும், தவிலும் ஒலிக்க ஊர்வலம் போகும் காட்சியை நன்கு அனுபவிப்பார்.

ஒருநாள் சன்னல் நோயாளி செத்துப்போனார். மீண்டும் எலும்பு நோயாளிக்கு வெறுமைஞ் ஒருநாள் செவிலி வந்தபோது, தன் படுக்கையை சன்னல் ஓரமாக மாற்றித்தரும்படி கேட்டுக் கொள்ள, அவ்வாறே செய்யப்பட்டது. இனி எனக்கு நன்கு பொழுது போகும் என்று எண்ணிய வாறே. தன் எலும்பு முறிவு வலியையும் பொருட்ப டுத்தாமல் மெல்ல தன் உடலை உயர்த்தி சன்னல் வழியே நோக்க, அங்கே பெரிய சுவர். வேறு எதுவுமே இல்லை.

அப்படியானால் சன்னல் நோயாளி சொன்ன கதைகள்? மறுநாள் செவிலி வந்தவுடன், நடந்த வற்றை எலும்பு நோயாளி கூறினார். செவிலி, எலும்பு நோயாளிக்கு ஊசி மூலம் மருந்தை ஏற்றியபடியே சொன்னாள். நீங்கள் பார்க்கும் சுவர் கூட அவருக்கு தெரிந்திருக்காது. புற்றுநோயின் தாக்கத்தால் அவர் பார்வையை எப்போதோ இழந்துவிட்டிருந்தார்.

நீதி : தன் துன்பங்களை மறைத்துக்கொண்டு மற்றவர்களை உற்சாகப்படுத்தும் மிகச்சில மனிதர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

Makkal Visaranai Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed , at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. A. Mouriyan,

விரைவில்...

உண்மை, துணிவு, நேர்மை

# அரசியல் தீர்ப்பு

சமூகம், அரசியல் மற்றும் புலனாய்வு இதழ்



MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்

- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements and anything







No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33334, 044 - 4861 5321**